உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-137

விருப்ப சந்தா இதழ்

மே 1-15, 2022



## பொய் செய்திகளை வெளியிடுவோருக்கும் பெற்றோரை மதிக்காத கயவர்களுக்கும்

# கருடப்புராணம் கூறும் தண்டனை

# ஒழுக்கம் என்பது வளர்ச்சிக்கான வழிமுறை

கடவுள் ஒருவரால் மட்டுமே உங்களுக்கு உதவ முடியும். அவர் மீது பக்தி செலுத்துவதே உண்மையான மகிழ்ச்சி.

ஒழுக்கம் என்பது வளர்ச்சிக்கான வழி முறை. அது உங்கள் சுயவிருப்பத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்டது.

பிறருக்கு புத்திமதி கூறும் முன் உங்களுக்கு அத்தகுதி இருக்கிறதா என்று ஒருமுறை யோசித்துப் பாருங்கள்.

நீங்கள் செய்யும் வேலையை கடவுளுக்குச் செலுத்தும் பிரார்த்தனை யாக கருதி ஈடுபாட்டுடன் செய்யுங்கள்.

– ஸ்ரீஅன்னை



www.aanmeegamalar.com

# கோதானமும் வைகுண்ட வாசமும்



www.aanmeegamalar.com

ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், எந்த செயலை செய்தால் என்ன பலன் கிடைக்கும் என்பது போன்ற பல்வேறு மனித செயலுக்கு பற்பலபலன்களை கூறியுள்ளது கருடப் புராணம்,

அதில் ஒன்றாக கோதானத்தைப் பற்றிய பதிவு அனைவரும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

கோதானம் செய்தவருக்கு, அப்பசு கன்று ஈனும் சமயத்தில் தானத்தை செய்தவருக்கு வைகுண்ட வாசம் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

# சிறிய தானம் பெரிய பலன்கள்



www.aanmeegamalar.com

வெயில், மழை போன்றவற்றிலிருந்து மனிதர்களை காக்கும் குடையை தானம் செய்தால் வருணபகவான் மிகவும் மகிழ்வார்.

குடை தானத்தை செய்கின்றவர்கள் தனது இறப்பிற்கு பின் ஆயிரம் ஆண்டுகள் வருண லோகத்தில் வாழ வருணபகவான் அனுமதிப்பார் என்று கூறப்படுகிறது.

பனியிலும், குளிரிலும் கிடந்து துன்பப்படுபவர்களுக்குதேவையான போர்வை, பாய், தலையணை முதலியவற்றை கொடுக்கக் கூடியவர்கள் சந்திர லோகத்தை அடைந்து சுகங்களை அனுபவிப்பார்கள். www.aanmeegamalar.com

மற்றவர்களுக்கு தேவைப்படக்கூடிய அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக இருக்கக்கூடிய ஒருவரின் மானத்தையும், மரியாதையும் காப்பாற்றக்கூடிய உடையை தானமாக அளிக்கக்கூடியவர்கள் பத்தாயிரம் ஆண்டுகள் வாயு லோகத்தில் வாழ்வார்கள்.

பிறவிகளின் அரிய பிறப்பான மானிடப் பிறப்பெடுத்து தன்னால் முடிந்த அளவு நல்ல கருமங்களை மட்டும் செய்து இருக்கக்கூடியவர்கள் இறந்த பின்பு சொர்க்க லோகத்தை அடைவார்கள். அதன் பின்பு நல்ல குணம் உள்ள உயர்ந்த குலத்தில் பிறந்து சிறப்புடன் வாழ்வார்கள்!

# ஒருநாள் விரதமிருந்தால்
# நூறு யாகம் செய்த பலன் தரும் கோவில்

சிவன்கோவில் அல்லது பெருமாள்கோவில் என்று தனித்தனியாக கோவில்கள் அமைந்திருப்பதை பார்த்திருப்போம், ஆனால் அம்பாளின் வேண்டு கோளுக்கிணங்க சிவனும், பெருமாளும் ஒரே கோவிலில் ஒன்றாக காட்சியளிக்கும் பிரசித்தி பெற்ற கோவிலை கொண்டுள்ளது திருநெல்வேலி மாவட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சங்கரன் கோவிலுக்கு பல்வேறு சிறப்புகள் உள்ளது, இத் தலம் கிபி.1022ல் உக்கிரபாண்டிய மன்னனால் கட்டப்பட்டது.

தமிழகத்திற்கும், பெருமாளுக்கும் சம்பந்தம் கிடையாது என்று விஷமிகள் கூறும் இக்காலத்தில், ஆயிரம் வருடங்களுக்கு முன்பே தமிழ் மன்னனால் கட்டப்பட்ட இத்தலம், சிவனும் பெருமாளும் ஒன்றே என்பதை பரைசாற்றுவதாகவும், தமிழர்களின் தெய்வ வழிபாட்டின் சிறப்பை கூறுவதாகவும் அமைந்துள்ளது.

இத்தலத்தில், ஸ்ரீ கோமதி அம்மன், சிவனை வேண்டி ஊசி முனை மேலிருந்து தவம் செய்யும் யோகினியாக அருள்பாலிக்கிறார்.

சங்கன், பதுமன் என்ற இரு நாக மன்னர் களிடையே சண்டை மூண்டது. சங்கன் தன் கடவுளான சிவனே அதிக ஆற்றல் உள்ளவர் என்றும் பதுமன் தன் விருப்பக் கடவுளான திரு மாலே அதிக ஆற்றல் உடையவர் என்றும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

இருவரும் அம்மனிடன் சென்று முறையிட்டனர். சங்கன், பதுமன் மட்டுமின்றி, இறைவனின் முழு வடிவத்தை உலக மக்கள் உணர வேண்டும் என அம்மன் சிவனிடம் வேண்ட, அம்ம னின் வேண்டுகோளுக்கு இணங்க சிவன், சங்கர நாராயணராகக் (சங்கரன்–சிவன்; நாரா யணன் –திருமால்) காட்சியளித்தார்கள்.




கடவுளர் இருவருமே சமம் என்றும், அன்பினாலும் தியாகத்தாலும் மட்டுமே இவர்களை அடைய முடியும் என்றும், சிவனும் திருமாலும் இணைந்த

சங்கரநாராயணர் தோற்றத்தால் உணர்த்தப்பட்ட திருத்தலம் இது.

நாகர் இருவரும் இறைவனை வழி பட்டு, கோமதி அம்மனுடன் தங்கினர். நாகங்கள் அம்மனுடன் குடியிருப்பதால், இந்தத் தேவியை வணங்குவதன் மூலம், பயத்தைப் போக்கலாம். இங்கு உள்ள புற்று மண் மிகவும் பிரசித்தி பெற்றது.

புற்று மண்ணை நெற்றியில் திரு நீராக எண்ணி பக்தியுடன் பக்தர்கள் இட்டுக்கொள்வார்கள். பாம்பாட்டி சித்தர் இவ்வூரிலே வாழ்ந்து, தேவியின் மகிமைகளை உலகறியச் செய்தார்.




இவரது சமாதியும் கோவிலுக்கு அருகிலேயே அமைந்துள்ளது. இத்தலம் தென்பாண்டி நாட்டின் பஞ்சபூத தலங்களில் மண்தலம் (ப்ரித்திவி) ஆகும்.

இத்தலத்திற்கு பல சிறப்புகள் உள்ளன.

பொதுவாக முனிவர்கள், ஞானிகள் போன்றோர் ஒரு வருடம் பழமும், ஒரு வருடம் சருகும், ஒரு வருடம் தண்ணீரும், ஒரு வருடம் அதுவும் கூட இல்லாமல் விரதமிருந்து பல்வேறு பலன்களை பெற்றுள்ளதாக புராணங்களில் கூறப்படுவதை கேட்டிருப்போம்.

ஆனால் இந்த சங்கர நாராயணர் கோவிலில் இதுபோன்று கடுமையான எந்த தவமும் மேற்கொள்ள வேண் டியதில்லை, ஒரே ஒரு வேளை பட்டினி இருந்து இத்தலத்து இறைவனை வணங்கினாலே போதும். பல நூறு யாகங்கள் செய்த பலன் கிடைத்து விடும்.

இங்கு ஒரு நாள் தங்கினால் முற்பிறவியில் செய்த பாவமும்,

இ ர ண் டு நாள் தங்கினால் இ ப் பி ற ப் பி ல் செய்த பாவமும்,

மூன்று நாள் த ங் கி ன ா ல் மறுபிறவி யில் பாவமே செய்ய இயலாத மன நிலையும் ஏற்படும்..

அதேப்போன்று,

ஞாயிறன்று இங்கு சூரியனை மனதில் நினைத்து விரதமிருப்பவர் கண் வியாதியின்றி இருப்பர்.

திங்களன்று சந்திரனை நினைத்து விரதமிருப்பவர் வாழ்வுக்குப் பின் சிவலோகம் அடைவர்.

செவ்வாயன்று விரதமிருப் பவர்நோய் மற்றும் சனிதோஷத் தில் இருந்து நிவர்த்தி பெறுவர்.

புதனன்று விரதமிருப்பவர் கல்வியில் சிறப்பாகத் திகழ்வர்.

வியாழனன்று விரதமிருந்தால் ஆசிரியர் பதவி பெறலாம்.

வெள்ளியன்று விரதமிருப்போர் இந்திரனைப் போல் செல்வவளத்துடன் வாழ்வர்.

சனிக்கிழமை விரதமிருப்பவர் பொறாமை முதலிய துர்குணங்கள் நீங்கப்பெறுவர்.

இந்த ஸ்தலத்திற்கு வந் தால் போதும் கொடிய பாவங்கள் நீங்கிவிடும்.

இக்கோயிலில் புற்று மண்ணே பிரசாதம். இதைஅத்தலத்துஇறைவனே தருகிறார் என்ற பெருமைக்குரிது இத்தலம்.


கீதா-ராஜன்

இதற்கு புன்னைவனம் சீரரசை என்றும் பெயருண்டு.

இங்கே ஒரு சிவனடியாருக்கு தானம் செய்தால் மற்ற தலங்களில் லட்சம் சிவனடியார்களுக்கு சேவை செய்த பலன் கிடைக்கும்...

இங்கே ஒரு கன்னிகா தானம் செய்துவைத்தால் (திருமணம்) ஆயிரம் கன்னிகா தானம் செய்த பாக்கியம் கிடைக்கும் என்று கூறுகிறார் சூத முனிவர்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203



# பழனி முருகனுக்கு முன்உருவான கூவமலை முருகன்




உலகில் நடைபெற்ற அனைத்து நிகழ்விற்கும் ஒரு காரண, காரியத்தை இறைவன் உண்டாக்கி வைத்தான் என்பதை உணருவதற்கு, இறைவனால் நிகழ்த்தப்பட்ட நிகழ்வே புராணங்கள் ஆகும்.

அந்த வகையில், உலகில் உள்ள அனைத்து நிகழ்விற்கும் ஒரு காரணம் இல்லாமல் இல்லை, இதை நிகழ்கால மக்கள் உணரவேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக இருப்பது கூவமலை முருகன் வரலாறு.

எந்த தொழிலாக இருந்தாலும், அல்லது எந்த செயலாக இருந்தாலும், அதற்கு ஒரு தலைவன் என்பவன் இருப்பான், அவ்வாறு அத்தொழில் அல்லது செயலுக்கு தலைமை தாங்கு பவர்களுக்கு அவசியம் ஒரு தகுதி வேண்டும். இத்தகுதி இல்லாதவர்கள் கண்டிப்பாக புறக் கணிக்கவேண்டும் என்பதே கூவமலை உணர்த்தும் புராண பின்னணி.

படைத்தல், காத்தல், அழித்தல் தொழில் செய்யும் மும்மூர்த்திகளுக்கு அவர்கள் செய்யும் தொழிலுக்கு தகுதி உள்ளதா என்பதை சோதிக்க நினைத்தான் முருகன்.

'ஓம்' என்பது, படைப்புக்கு தேவையான மந்திரம். இதன் பொருள் தெரியாமல் பிரம்மா படைப்புத் தொழிலை செய்து வந்தார். ஒரு தொழில் செய்பவன், அதன் அடிப்படை தெரி யாமல் செய்தால், அந்தத் தொழிலின் மூலம் உற்பத்தியாகும் பொருட்களின் தரத்திற்கு என்ன உத்தரவாதம் இருக்க முடியும்!

இதையறிந்த முருகன், பிரம்மாவிடம் சென்று, அந்த மந்திரத்தின் பொருளைக் கேட்டார். பிரம்மா வுக்கு அதன் பொருள் தெரியவில்லை. விஷ்ணு, சிவன் ஆகியோரிடமும் கேட்டார் முருகன். சரியான பதில் கிடைக்கவில்லை.

இதனால் கோபம் கொண்ட முருகப்பெருமான், படைப்பது, காப்பது, அழிப்பது ஆகிய முக்கிய முத்தொழில்களைச் செய்யும் இந்த மூவரையும், முருகன், தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

பிரம்ம சாஸ்தா என்னும் பெயருடன் பூலோகம் வந்து, மும்மூர்த்திகளின் தொழிலையும் முருகனே மேற்கொண்டார். ஏனெனில், அவருக்கு அந்த மந்திரத்தின் பொருள் தெரியும். 'எல்லாம் நானே' என்பது தான் அந்த மந்திரத்தின் எளிய பொருள்.

இவ்வாறு முருகன் அனைத்து பணிகளையும்

ஒருங்கே செய்யும் கோலத்தில் பூலோகத்தில் தங்கிய தலம் கொல்லிமலை அடிவாரத்திலுள்ள பேளுக்குறிச்சி கூவை மலையாகும்.

இந்த இடத்தில், முருகனுக்கு, கோவில் கட்டினார் வள்ளல்களில் ஒருவரான, வல்வில் ஓரி. 'கூவை' என்பது கழுகு போன்ற பெரிய பறவை. வானத்திலிருந்து கூவை மலையைப் பார்த்தால், கழுகு சிறகை விரித்திருப்பது போல காணப்படுவதால் இப்பெயர் வந்தது. சுவாமிக்கு, 'பழனியாண்டவர்' எனப் பெயர். முருகன், பூலோகம் வரும் போது, அவரது கொடியில் இருந்த சேவலும் வந்து விட்டது. அதை முருகன் கையில் தாங்கிக் கொண்டார். இதனால், இங்குள்ள முருகனின் கையில் சேவல் கொடிக்கு பதிலாக, சேவலே இருப்பதைக் காணலாம்.

இங்குள்ள முருகனை நேராக நின்று வணங்கினால் வேடனைப் போலவும், வலதுபுறம் நின்று தரிசித்தால் ஆண் வடிவமாகவும், இடதுபுறமாக நின்று வணங்கினால், பெண் வடிவமாகவும் காட்சி தருவது விசேஷத்திலும் விசேஷம். சக்தியும் சிவனும் இணைந்த அர்த்தநாரீஸ்வர வடிவம் என இதைக் கொள்ளலாம். எனவே, இவருக்கு சக்தி அதிகம்.

மூன்றரை அடி உயரம் கொண்ட இந்த சிலையைப் பார்த்த பின்புதான், பழனியில் நவபாஷாண முருகன் சிலையை போகர் உருவாக்கினார் என்றும் கூறப்படுகிறது.

முருகன், வேடன் கோலத்தில் இருப்பதால், தலையில் கொண்டையும், வேங்கை மலர்க்கிரீடமும், கொன்றை மலரும், ருத்திராட்ச மாலையும் சூடியபடி இருக்கிறார். காலில், காலணி, வீரதண்டை அணிந்திருக்கிறார். இடது கையில், வேலும், இடுப்பில், கத்தியும், வலது கையில், வஜ்ரவேலும் தாங்கியிருக்கிறார்.

மேலும் ஒரு சிறப்பாக முருகனின் காவலரான இடும்பனுக்கு, பூஜை முடிந்த பின்னரே, முருகனுக்கு பூஜை செய்வது வழக்கம்.

மலையடிவாரத்தில் யானை வடிவிலான வற்றாத சுனை காணப்படுகிறது. இதை, 'யானைப்பாழி




தீர்த்தம்' என்பர். ஆண்டு முழுவதும் தண்ணீர் இருக்கும். இதிலுள்ள நீரை உடலில் தெளித்தால், தோல் மற்றும் எலும்பு நோய் நீங்கும் என்பர்.

இத்திருத்தலம், நாமக்கல்லில் இருந்து சேர்ந்தமங்கலம் வழியாக ராசிபுரம் செல்லும் சாலையில், 22 கி.மீ., தூரத்தில் பேளுக்குறிச்சி உள்ளது. இங்கிருந்து, 4 கி.மீ., தூரத்தில் மலை அடிவாரத்தில் கோவில் அமைந்துள்ளது. 240 படிகள் ஏறி இத்தல இறைவனை வணங்கலாம்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்:
9841807572



புனிதவேல்



# பௌர்ணமிதோறும் சித்தர்கள் உலாவரும் முருகன் கோவில்

## பூந்நீரை தேடிவரும் ஆயுர்வேத மருத்துவர்கள்




சிவகங்கையிலிருந்து மதுரை செல்லும் நெடுஞ்சாலையில் சுமார் 8 கி.மீ தொலைவில் இருக்கும் பில்லூர் விலக்கு என்ற இடத் திலிருந்து பிரியும் சாலையில் சென்றால் கோவனூரில் முருகன் திருக்கோயில் உள்ளது.

இத்தலம், மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் கட்டப்பட்டதாகச் சொல்லப்படு கிறது.

இத்தலத்தை சித்தர்கள் ஸ்தலம் என்றும் போற்றுகின்றனர். சித்தர்கள் சாகாவரம் பெற்ற ஊர் என்றும், முருகப்பெருமான் அவதரித்த ஊர் என்றும் பல செவிவழிச் செய்திகள் சொல்லப்படுகின்றன.

முற்காலத்தில் அகத்தியர், போகர் போன்ற சித்தர்கள் திருப்பூவனம் சென்று பூவனநாதரை வழிபாடு செய்தனர். பிறகு காளையார்கோவில் அருள்மிகு சொர்ண காளீஸ்வரரை வழிபடுவதற்காகச் சென்றனர்.

செல்லும் வழியில் காட்டுப் பகுதியாக இருந்த கோவனூரில் தங்கிவிட்டார்கள். காலையில் எழுந்ததும் நீராடி, சிவபூஜை செய்வ தற்காக எங்கேனும் நீர்நிலை இருக்கிறதா என்று சுற்றிலும் பார்த்தனர். எங்குமே தண்ணீர் இல்லாத நிலையில், அவர்கள் சிவபெருமானைக் குறித்து வழிபட்டனர்.

உடனே சிவபெருமான் தம் திருமுடியிலிருந்து கங்கையைப் பெருக்கெடுக்கவிட்டார்.



அகத்தியர் அந்தத் தீர்த்தத்தைக் கொண்டு பூஜை செய்த போது, சிறிது தீர்த்தம் அருகிலிருந்த செடியின் மீது பட்டது. செடியின் மீது பட்ட நீர் பூநீராகப் பெருகியது. பூ நீர்சித்த மருத்துவத்தில் மிகப் பெரிய அளவில் பயன்படுத்தப்படும் அருமருந்து.

இந்த கோவனூர் தலத்துக்கு மூன்று திசைகளிலும் குண்டுமணி அம்மன், சுந்தரவள்ளி அம்மன், ராக்காச்சி அம்மன் ஆகிய மூவர் காவல் தெய்வங்களாகத் திகழ்கின்றனர்.

இவற்றுள் கோயிலுக்கு நேர்கிழக்கில் ஒரு கி.மீ தொலைவில் அமைந்திருக்கும் குண்டுமணி அம்மன் கோயில்தான் மிகவும் விசேஷமானது.

ஒவ்வொரு பௌர்ணமியன்றும் குண்டுமணி அம்மனுக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. சித்ரா பௌர்ணமியன்று இங்கே நடைபெறும் விழா மிகவும் பிரபலம்.

அன்றுதான் சித்தர்கள் சூட்சும வடிவில் கோவனூர் கோயிலுக்கு வந்து முருகப் பெருமானை வழிபடுகின்றனர். சித்ரா பௌர்ணமியில் மட்டுமல்லாமல், மாசிமகம், பங்குனி உத்திரம் போன்ற நாள்களிலும் சித்தர்கள் இங்கே வந்து வழிபாடு செய்வதாக கூறப்படுகிறது.

பின்னர் குண்டுமணி அம்மன் கோயிலுக்குச் சென்று அம்மனை வழிபட்டு, அங்கே கிடைக்கும் பூநீரைப் பருகுவதாகச் சொல்கிறார்கள். அன்றைய தினம் சித்த வைத்தியர்களும் கோயிலுக்கு வந்து பூநீர் சேகரித்துச் செல்வதை இன்றைக்கும் நாம் காணலாம்.

கோவனூரில் உள்ள முருகன் கோயில் விபூதிப் பிரசாதம் அளவற்ற மகிமை கொண்டது. திருச்செந்தூரில் தருவதுபோலவே இங்கும் இலை விபூதி பிரசாதமாகத் தரப்படுகிறது.


குண்டுமணி அம்மன் கோயில்

# பாவத்தை போக்கிக் கொள்ள

# விநாயகர் தவமிருந்த பிள்ளையார்பட்டி

கயமுகா சூரனை கொன்ற பிள்ளையார் தனக்கு ஏற்பட்ட பாவத்தை போக்கிக் கொள்ள சிவபெருமானை நோக்கி தவம் செய்த இடம் பிள்ளையார் பட்டியாகும். இங்கு சிவபெருமானை நோக்கி தவம் செய்த வண்ணம், வடக்கு முகமாகவே பக்தர்களுக்கு விநாயகர் அருள் பாலிக்கிறார்.

கற்பக விநாயகர் தனது வலது கையில் ஒரு சிவலிங்க சின்னமும், இடது கரத்தை தனது வயிற்றை சுற்றியுள்ள கச்சையின் மீதும் வைத்துக் கொண்டும் அமர்ந்து இருக்கிறார்.

இவரது தும்பிக்கை வழஞ்சுழியாக இருக்கிறது. மற்றொரு சிறப்பு அம்சம் இவருக்கு முப்பரிநூல் கிடையாது.

விநாயகர் சன்னதிக்கு எதிர்புறம் அமைந்துள்ள வடக்கு கோபுரவாசல் வழியாக சென்று வழிபட்ட பின்பு கிழக்கு கோபுரவாசல் வழியாக வரவேண்டும் என்பது மரபு.

விநாயகர் கோபுரத்துக்கு எதிர்புறத்தில் வெளிபிரகாரத்தின் வட திசையில் விசாலமான திருக்குளம் உள்ளது. ஒவ்வொரு சதுர்த்தியின் இரவு நேரத்தில் விநாயகர் மூசிக வாகனத்தில் எழுந்தருளி கோவில் உட்பிரகாரத்தில் வலம் வருவார்.

பிள்ளையார்பட்டியில் விநாயகர் சதுர்த்தியை ஒட்டி பத்து நாள் திருவிழா நடைபெறுகிறது. ஒன்பதாம் நாள் தேர்திருவிழா புகழ் பெற்றது. இங்கு பிள்ளையாருக்கு தனியே தேர் உள்ளது. பிள்ளையார் தேரில் இரு வடங்களில் ஒன்றை ஆண்களும், மற்றொன்றை பெண்களும் இழுத்துச் செல்வார்கள்.

6 அடி உயர கம்பீரமாக அமர்ந்த கோலத்தில் காட்சிதரும் விநாயகர். இது ஒரு குடவரைக் கோவில்.

தமிழகத்திலேயே உண்டியல் இல்லாத கோயில் இதுதான். ஆண்டு தோறும் விநாயகர் சதுர்த்தி அன்று மஹா கொழுக்கட்டை செய்யப்படுகிறது.

விநாயகர் சதுர்த்தி திருவிழா ஆவணி மாதம் 10 நாட்கள். ஒன்பது நாட்கள் முன்பாக காப்புக்கட்டி கொடி ஏற்றம் செய்து திருநாள் தொடங்கும். சதுர்த்தி அன்று இரவு விநாயகப் பெருமான் வெள்ளி மூஷிக வாகனத்தில் எழுந்தருளுவது விசேஷம்.



# தெரியாத, புரியாத, ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக தொகுத்து பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் நமது இதழில் வெளியிட்டு வருகிறோம்...**

இதுவரை வெளிவந்த

**130** க்கும் மேற்பட்ட

**இதழ்களை**

**aanmeegamalar.com**

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**

eBook DOWNLOAD

eBook DOWNLOAD

eBook DOWNLOAD

free



# செவ்வாய், வெள்ளி

## இறைவழிபாட்டிற்கு முக்கியத்துவம் பெற என்ன காரணம்?

### செவ்வாய்க்கிழமை

வடஇந்தியாவில் செவ்வாய்க்கிழமையை மங்கலவாரம் என்று கூறுவது உண்டு. அந்த வகையில் மங்கல காரியங்கள், தெய்வ வழிபாடு மேற்கொள்ள இந்நாள் உகந்தது. தென்னிந்தியாவில் செவ்வாயோ வெறும் வாயோ என்ற வழக்கு உள்ளது.

எனவே, அன்றைய தினம் தெய்வ வழிபாடு சிறந்தது எனக் கூறுவர்.

மேல்நோக்கு நாள், நல்ல நட்சத் திரம் இருந்து அமிர்தயோகமான செவ்வாய்க் கிழமையில் வீடு/மனை வாங்க முன்பணம் அளிப்பதுடன், ஒப்பந்தமும் போடலாம், வியாபாரம் துவங்கலாம்.செங்கல் தொழில், கட்டிட கட்டுமானம் ஆகிய தொழில்கள் துவங்கவும் உகந்தது. பொதுவாகவே, மருந்து உண்பதற்கும், ரத்த தானம் செய்வதற்கும், அறுவை சிகிச்சை மேற் கொள்ளவும் செவ்வாய்க்கிழமை உகந்தது.

### வெள்ளிக்கிழமை

வெள்ளிக்கிழமையை சுக்கிரவாரம் என்று கூறுவர். அன்றைய தினம் இறை வனை வழிபட்டால் அனைத்து பலன் களும் கிடைக்கும்.

இறந்தவரை எழுப்புவிக்கும் சஞ் சீவி மந்திரம் அறிந்தவர் சுக்கிராச்சாரி என ஜோதிட கூறுகிறது. சூட்சும சக்தி உடையவராக சுக்கிரன் கருதப்படுகிறார்.

எனவே, செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் இறைவனை வணங்கினால் காரிய சித்தி கிடைக்கும். தோஷக் குறைகளும் நிவர்த்தியாகும்.

இதனால்தான் நமது முன்னோர்கள் இந்த இரு தினங்களையும் தெய்வ வழிபாடு மற்றும் அம்பாளுக்கு உகந்த நாளாகவும் கொண்டாடினர்.



www.aanmeegamalar.com



# பொய் செய்திகளை வெளியிடுவோரும் பெற்றோரை மதிக்காத கயவர்களுக்கும்

# வைதரணி நதியில் தண்டனை கிடைக்கும்

www.aanmeegamalar.com

மனிதப் பிறவி எடுக்கும் மனிதன் பூலோகத்தில் செய்யும் ஒவ்வொரு கெடுதல் தரும் செயலுக்கும் அதற்குரிய பலன்களை அவசியம் அனுபவித்தே தீரவேண்டும் என்பது விதி, இந்த விதிப்படி வாழாத மனிதர்களுக்கு எமலோகத்தில் என்ன தண்டனை கிடைக்கும் என்பதை ஸ்ரீமன் நாராயணன் கருடனிடம் கூறுவதை கருடப்புராணம் என்று கூறுகிறோம்.

இப்படி கருடப்புராணத்தில் வைதரணி நதி என்ற இடத்தை குறிப்பிட்டு பல்வேறு குற்றங்களுக்கு இந்த நதியில் தண்டனைகொடுக்கப்படுவதாக கூறுகிறார் நாராயணன்.

அந்த நதி எப்படிப்பட்ட நதி என்பதை முதலில் பார்ப்போம், அதற்கு பின் எந்த குற்றத்திற்கு அந்த நதியில் தண்டனை என்பதை பார்ப்போம்.

வைதரணி நதி என்பது மிகவும் மோசமான ஒரு நதி ஆகும். ரத்தமும், சீழும், மலமும், சிறுநீரும் கலந்திருக்கும். இந்த நதியில் வித்தியாசமான முகங்களுடன் கூடிய பிராணிகளும், ஜந்துக்களும் வாழ்ந்து கொண்டிருக்கும். நீங்கள் இறந்த பின்பு எமலோகம் செல்லும் வழியில் இந்த நதியில் உங்களை எமதூதர்கள்




**தள்ளி விட்டு விடுவார்கள். இதில் கிடந்து நீங்கள் செய்த பாவத்திற்கான தண்டனையை ஏற்று அதில் உழன்று அந்த ஜந்துக்களிடம் பல்வேறு துன்பங்களை அனுபவித்து ஆக வேண்டும் என்பது விதியாகும்.**

### பெற்றோரை கவனிக்காத கயவர்களுக்கு?

தான் என்ற அகந்தையுடன் வாழ்ந்துகொண்டிருப்பவர்களும், தன்னை ஈன்றெடுத்த பெற்றோர்களை கவனிக்காமல் அவர்களின் மனதினை புண்படுத்தக்கூடியவர்களும், தனக்கு உலக வாழ்க்கையை புரிய வைத்த ஆசிரிய பெருமக்களை அவமதித்தவர்களும் எமபுரிக்கு செல்லும் வழியில் உள்ள வைதரணி நதியில் விழுந்து துன்பத்தை அனுபவிப்பார்கள்.

### ஏமாற்றும் பாவிகளுக்கு?

தன்னை நேசித்தவர்களுக்கு துரோகம் இழைத்தவர்களும், வாழ்வதற்கு பலவகைகளில் உதவியாக இருந்தவர்களை ஏமாற்றி அவர்களுக்கு தீங்கு செய்தவர்களும், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் பலவிதமான துன்பங்களை இழைத்தவர்களும், சுபகாரிய செயல்களை செய்ய தடையாக இருந்தவர்கள் தன்னால் தானம் கொடுக்க முடியவில்லை என்றாலும் மற்றவர்கள் கொடுக் கக்கூடிய தானத்தை தடுக்கின்றவர்களும், வாக்குறுதிகளை அளித்து அதை நிறைவேற்றாமல் ஏமாற்றக்கூடியவர்களும் எமபுரிக்கு செல்லும் வழியில் உள்ள வைதரணி நதியில் விழுந்து துன்பத்தை அனுபவிப்பார்கள்.

### பொய் செய்தி பரப்பும் கள்வர்கள்?

எந்தவிதமான ஆதாரமும் இன்றி கூறிய கருத்துக்களில் இருக்கக்கூடிய உண்மைப் பொருளை உணராமல், மதங்களைப் பற்றி தவறான கருத்துக்களை கூறுகின்றவர்களும், திருமணக்கோலத்தில் இருக்கக்கூடிய பெண்கள் மீது தேவையற்ற பழி சுமைகளை சுமத்தி களங்கத்தை ஏற்படுத்தக்கூடியவர்களும், சுயநல நோக்கில் தனக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் தேவையான பொருட்கள் கிடைக்கும் வகையில் சலுகை செய்யக்கூடியவர்களும், தனக்கு வேண்டாதவர்களுக்கு கிடைக்க இருக்கக்கூடிய பொருட்களை கிடைக்கவிடாமல் தடுக்கக் கூடியவர்களும், எப்பொழுதும் மற்றவர்கள் மீது கோபத்துடன் நிந்தனை செய்யக்கூடியவர்களும் எமபுரிக்கு செல்லும் வழியில் உள்ள வைதரணி நதியில் விழுந்து துன்பத்தை அனுபவிப்பார்கள்.

பிறவிகள் என்பது அவரவர்கள் செய்கின்ற நல்ல மற்றும் தீய கர்மங்களின் அடிப்படையில் நிர்ணயம் ஆகின்றன என்று ஸ்ரீமந்நாராயணர் கருடாழ்வாருக்கு எடுத்துரைத்தார்.

# ராமாயணமும் உண்மை தன்மையும்

ராமாயணத்தில் புஷ்பக விமானத்தில் சீதாதேவியை ராவணன் நாசிக் அருகே பஞ் சவடி என்ற இடத்திலிருந்து வலுக்கட்டாயமாக இலங்கைக்கு தூக்கிச்சென்றபோது...

ஹம்பி (கர்நாடகா), லெப்பாக்ஷி (ஆந்திரா) வழியாக தன் தலைநகரை அடைந்தான்...

இதில் பெரிய வேடிக்கை என்னவென்றால் Nasik, Hampi, Lepaxi and SriLanka இன்றய வான்வழி (விமான வழித்தடம் போல்) நேர் கோட்டில் இருக்கிறது (படம் கொடுக்கப்பட்டுள்ளது).

தங்கள் வனவாச காலத்தில் நாசிக் அருகில் இருந்த பஞ்சவடி என்ற இடத்தில் ராமர், லெட்சுமணன், சீதை இருந்தனர்.

அங்கு அவர்கள் இருந்த காலத்தில் தன்னை மணக்கச்சொன்ன சூர்ப்பனகை மூக்கை வெட்டிவிடுகிறான் லட்சுமணன்.

அதன் காரணமாக நாசிக் (ஹிந்தியில் நாஸி என்றால் மூக்கு) என்று அந்த ஊர் பெயர் வர காரணமானது.


ரிஷ்யாமுக் பர்வதம் (Hampi அருகில்) ஹனுமன் மற்றும் அவரது வானர கூட்டாளிகள் கூட்டமாக இருந்ததை பார்த்த சீதை தனது நகைகளை கழற்றி துணியில் சுற்றி எரிகிறாள்.

ஆனால் இதை கவனிக்காத வானரங்கள் அந்த நகைகளைவைத்து விளையாடியாடுகிறது.

ஆனால், பறவை அரசன் ஜடாயு சீதையின் குறிப்புகளை உணர்ந்து ராவணனுடன் நடு வானில் போரிட்டு ராவணனின் வாளுக்கு இரையாகி கீழே விழுகிறார்.

இதைப் பார்த்த சீதாதேவி, "ஹை பக்ஷி" என்று வருந்தி அழைத்த இடமே இன்றய ஆந்திராவின் லெப்பக்ஷி என்ற இடம்.

சீதாப்பிராட்டியைக் காப்பாற்ற இராவணனுடன் போராடிய ஜடாயுவை இராவணன் தனது வாளால் தாக்கி இறக்கைகளை வெட்டி வீழ்த்தி னான். தம்பியுடன் சீதையைத் தேடிவந்த இராமபிரான், உயிருக்குப் போராடிய ஜடாயுவை, பார்த்து, ஜடாயுவின் தலையை மடியில் வைத்து "லே பக்ஷசி (பறவையே எழுந்திரு!) என்று மயக்கம் தெளிவித்து, தான் யார் என்று கூறி ஜடாவின் நிலைக்குக் காரணம் கேட்டார். ஜடாயு இராவணன் சீதையை புஷ்பக விமானத்தில் கடத்திச் செல்வதைக் கூறியபின் உயிர் துறக்க, ஜடாயுவுக்கு இறுதிக் காரியங்களை முடித்து, பின் இராமர் தேடலைத் தொடர்ந்ததாக இதிகாசம் கூறுகிறது!




வால்மீகியால் சொல்லப்பட்ட அத்தனை ஊர்களும் ஒரே நேர்கோட்டில் இருக்கிறது.

ராமாயணத்தில் சொல்லப்பட்ட அத்தனையும் உண்மை!

ராமாயண கதையை பிறருக்கு சொல்லும்போது இதுபோன்ற ஊர்களின் பெயரையும் எடுத்துக் கூறி கதையை கூறினால் இராமாயணத்தின் உண்மைத் தன்மையை எளிதாக புரிந்து கொள்ள முடியும்.

# விநாயகரும் கொழுக்கட்டையும்



சங்கடஹர சதுர்த்தி, விநாயகர் சதுர்த்தி, கணபதி ஹோமம் போன்ற அனைத்து செயல்களையும்செய்யும் போது விநாயகப்பெருமானுக்கு கொழுக்கட்டை வைத்து படைப்போம், ஆனால் விநாயகருக்கும் கொழுக்கட்டைக்கும்என்ன சம்பந்தம் என்பதை யோசிக்கமாட்டோம்.

உண்மையில் விநாயகருக்கு கொழுக்கட்டை படைப்பதின் காரணத்தை புராண கதை மூலம் பார்ப்போம்.

ஞானபாலி என்பவன் சத்தியமே வடிவான உத்தம அரசன். முழுமுதற் கடவுளான கணபதியின் தீவிர பக்தன். விநாயகரின் பக்தனாக நாட்டைநல்ல முறையில் ஆட்சிசெய்து வந்தபோதும், ஒருமுறை பெரும் பஞ்சம் வந்துவிட்டது.

மக்கள் கஷ்டப்பட்டுவிடக் கூடாதே என்று பலவகைத் திட்டங்களைத் தீட்டி, அவர்களைக் காப்பாற்றி வந்தான். எனினும் பஞ்சம் தொடர்ந்து நீடித்ததால், ராஜ குருவின் ஆலோசனைப்படி ருத்ரயாகம் ஒன்றைச் செய்யத் தொடங்கினான்.

யாகத்தின் நடுவே அரசனின் விதி தனது வேலையைத் தொடங்கியது. ஆம், அந்த வழியே சென்ற மேனகை, ஞானபாலியின் கண்களைக் கவர்ந்தாள். சிற்றின்ப ஆசையால் அரசன் வேள்வியை பாதியில் நிறுத்திவிட்டு எழுந்து மேனகையின் பின் சென்றான். பின் னே வந்த அரசனை எச்சரித்துவிட்டு மேனகை மறைந்தாள்.

ஏமாந்து போன அரசன் ஞானபாலி மீண்டும் யாகம் செய்யும்



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

இடத்துக்கு வந்தான். யாகம் பாதியில் நின்ற தால் பெரும் ஆபத்து நேரும் என்று ராஜ குரு எச்சரித்தார். எனவே, மீண்டும் மற்றொரு நாள் யாகத்தைத் தொடங்கலாம் என்றும் அறிவுறுத் தினார். அதைக் கண்டுகொள்ளாமல் நின்று போன யாகத்தைத் தொடங்கிய ஞானபாலியை அஷ்ட திக் பாலர்கள் தோன்றி சபித்தனர். இதனால் ஒற்றைக் கண் பூதமாக மாறி அலையத் தொடங்கினான் ஞானபாலி.

கண்ணில்பட்ட மனிதர்களை எல்லாம் பிடித்து உண்டான் ஞானபாலி. கொடிய அரக்கனாக மாறி சகல உயிரினங்களையும் வதைத்தான். தீராத பெரும்பசியால் உயிர்களை எல்லாம் விழுங்கினான்.

எனினும், முந்தைய பழக்கத்தின் காரணமாக விநாயகப் பெருமானின் வழிபாட்டை மட்டும் தொடர்ந்தான். பூமிக்கே பெரும் அச்சுறுத்தலான ஞானபாலியை எந்த தேவர்களாலும் அழிக்க முடியவில்லை. அவனுக்கு கஜமுகனின் ஆசி இருந்ததே காரணம் என்று பூமாதேவி அறிந்துகொண்டாள். தன் மக்களைக் காக்க கணபதியை வேண்டினாள். தன் பக்தனான ஞானபாலிக்கு அருள் செய்யவும் பூவுலகைக் காக்கவும் கணபதி திருவுளம் கொண்டார்.

வேடனாக உருமாறி, ஞானபாலியைஎதிர்க்க வந்தார் கணபதி. காண்பவர் யாவரையும் அழித்துவிடும் பூத ஞானபாலியால், அந்த வேடனை ஒன்றும் செய்ய முடியவில்லை.

போர் நீண்டது, இறுதியாக வந்து இருப்பவர் கணபதிஎன்று கண்டுகொண்டான்ஞானபாலி. கண்ணீரோடு விழுந்து வணங்கி, தன்னை ரட்சித்து ஏற்றுக்கொள்ளுமாறுவேண்டி னான். தனது பெரும் பசியை போக்குவதுடன், தன் னையும் கணநாதராகிய பிள்ளையார் தம்மோடு வைத்துக் கொள்ளு மாறு வேண்டினான்.

பிறப்பிலா பெருவாழ்வைத் தந்து காக்குமாறு அழுதான், கண்ணீரால் தொழு தான். பரம பக்தனான ஞானபாலியைக் கொல்லவோ, பூமியில் அப்படியே விட்டுச் செல்லவோ அந்த மூல முழுமுதற் கடவுளுக்கு மனம் வரவில்லை. கொடுமையான செயல்கள் பல புரிந்ததால், சொர்க்கமும் ஞானபாலிக்குச் சாத்தியமில்லை என்று உணர்ந்தார்.

எனவே, அவன் வேண்டியபடியே தன்னுட னேயே அவனை வைத்துக்கொள்ள எண்ணினார். அதே சமயம் அவனது பெரும்பசிக்கும் வழி செய்ய திருவுள்ளம் கொண்ட கணபதி கடவுள், விஸ்வரூப வடிவம் எடுத்து, ஞானபாலியைத் தன் கையால் பிடித்து, அவனை ஒரு கொழுக்கட்டை வடிவமாக்கி விழுங்கிவிட்டார். இப்படியாக கணபதிக் கடவுளின் பக்தனான ஞானபாலி, கொழுக்கட்டை வடிவத்தில் விநாயகப் பெரு மானின் வயிற்றில் அமர்ந்துகொண்டான்.

பெறுதற்கரிய இந்தப் பேற்றை பெற்று ஆனந்தம் கொண்டான். தேவர்களும் மக்களும் இந்தச் சம்பவத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள். கணநாதரின் ஆணைப்படியே, ஞானபாலியின் பசியைப் போக்க, அவருக்குக் கொழுக்கட்டை படைக்கவும் ஒப்புக்கொண்டார்கள். அன்றி லிருந்து அவருக்குப் படைக்கப்படும் கொழுக் கட்டை யாவும் ஞானபாலிக்கே போய் சேர்ந்தன.

நாமும் இன்று வரை ஞானபாலியின் நினைவாக கொழுக்கட்டையைச் செய்து படைத்து வருகிறோம்.

`ஆன்மா என்ற இனிப்பானபூரணத்தைப் பொதித்து, இந்த உடலையே ஆண்ட வருக்காக அர்ப்பணிக்கிறோம்' என் பதே கொழுக்கட்டையின் தத்துவம்.

வாழும் காலம் வரை, தன்னை அப்படியே ஒப்படைக்க முடியாது என்பதால், கொழுக்கட்டையின் வாயிலாகச் செய்கிறோம்.

ஞானபாலியை வைத்து விநாயகப் பெருமான் நம் ஒவ் வொருவரையும் சரணாகதி அடையச் செய்துவிட்டான் என்பதே கொழுக்கட்டை படைப்ப தின் தத்துவமாகும்.





# இராசி பலன்



குறிப்பு: ஒருவரது தசா புத்தியே 70–75% வரையிலும், கோட்சாரம் 20–25% வரையும் பலனளிக்கும். ஆகவே இவை பொதுப்பலன்கள் என கொள்ளவேண்டும்.

## மேஷம் முதல் மீனம் வரையிலான 12 ராசிகளுக்கான பலன்கள்

அடுத்த 15 நாட்களுக்கு தரப்பட்டுள்ளது
**(01.05.22 முதல் 15.05.22 வரை)**




ஸ்ரீ வைத்தீஸ்வரன் அஸ்ட்ரோ ரிசர்ச் சென்டர், கிருஷ்ணகிரி
**கி.கார்த்திகேயன். செல்: 7904761779**




**மேஷம்:** ராசிநாதன் செவ்வாய் 11ல் சனி பகவானுடன் இருப்பது தொழில், வேலை வகையில் நீண்டநாள் நடக்காமல் இருந்த வேலை முடியும். ராசியில் உச்ச சூரியனுடன் இணைந்த ராகுவால் பதவி புகழ் மரியாதை உயரும். தந்தை, தந்தை ஸ்தானத்தில் உள்ளவர்களுடன் சுமூக உறவை கடைபிடிக்கவும். இரண்டில் உள்ள புதன் இனிமையான பேச்சு, காரியத்தில் வெற்றி, தொழிலில் விருத்தி உண்டு. 7 இல் கேது பகவான் கணவன் மனைவி அனுசரித்து செல்லவும். வருமானம் இலாப ஸ்தானத்தில் சனிபகவானுடன் செவ்வாய் அதிகம் உழைக்க வேண்டிவரும். 12இல் குருவுடன் சேர்ந்த சுக்கிரன் மனைவி வகையில் சுபச்செலவுகள், வண்டி வாகன பழுது பார்த்தால் போன்ற வகையில் செலவுகள் ஏற்படலாம். பரிகாரம்: முருக வழிபாடு. ஊனமுற்றோருக்கு உதவி.



**ரிஷபம்:** ராசி நாதன் சுக்கிரன் 11 இல் குருவுடன் சுபச் செலவுகளுக்காக கடன், சுபவிரயம் அதன் மூலம் இலாபம் ஏற்படும் வாய்ப்புகள் உண்டு. 2 மற்றும் 5க்குடைய புதன் ராசியில் நிற்பது தொழில், குடும்ப நிலவரம், பேச்சில் இனிமை, திருப்திகரமான வருமானம் இருக்கும். குழந்தைகளால் நன்மை, குழந்தை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். வேலைசெய்யும் இடத்தில் நற்பெயர் பொறுப்புகள் அதிகரிக்கும் அதன் பலன் உரிய காலத்தில் கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும். நீண்டகால பிரச்சனையில் மனத்தெளிவு பிறக்கும். தனித்து இருப்பதை விரும்புவீர்கள். குடும்பத்தைவிட்டு தனியாக கோயில் புனித தலங்களுக்கு சென்று வருவீர்கள் நகை, வண்டி, வாகன வகையில் செலவுகள் ஏற்படலாம். பரிகாரம்: விநாயகர், ஆஞ்சநேயர் வழிபாடு. வேற்று இன மதத்தினருக்கு உதவி



**மிதுனம்:** ராசிநாதன் புதன் ராசிக்கு 12 இல், வீண் விரையம் ஆரோக்கியம் சம்பந்தமாக பிரயாணம் அல்லது புனித தலங்களுக்கு, குழந்தைகள் படிப்பு சம்பந்தப்பட்ட தேவைகளுக்கான சிறு கடன்கள் ஏற்படலாம். அரசு அலுவலர்களுக்கு, அரசு சார்ந்த வேலைகளில் இலாபத்தை எதிர்பார்க்கலாம். காவல், தூய்மைப்பணியானர்களுக்கு பரிசு பாராட்டுக்கள் கிடைக்கும் மேலும் தொழில் மற்றும் உத்தியோக வகைகளின் ஆதாயம் ஏற்படும். தாய் தந்தையரால் அனுகூலமான நிலை, பூர்வீக சொத்து விஷயங்களில் சாதக நிலை உண்டாகும். உற்சாகம் தைரியம் கூடும். சிறு சிறு உடல் உபாதைகள் சிலருக்கு ஏற்படலாம். புதிய வண்டி வாகனம், ஆடம்பர பொருட்கள் வாங்கும் வாய்ப்புகள் கூடி வரும். பரிகாரம்: பெருமாள் வழிபாடு, சிறு

பறவைகளுக்கு நீர் மற்றும் உணவளிப்பது நன்மை தரும்

**கடகம்:** ராசிநாதன் சந்திரன் மேஷத்தில் உச்ச சூரியனுடன் உடல் மனநிலை சிறப்பாக இருக்கும். தொழில் குடும்பம் வருமானம் சீராக இருக்கும். உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். குடும்பத்தாரிடம் பொறுமையாக நடந்துகொள்ள வேண்டும். பிரயாணத்தில் சிறிது கவனம் அவசியம். தந்தை, தந்தை ஸ்தானத்தில் உள்ளவர்கள் மூலம் நன்மை விளையும். சிலருக்கு வேலை செய்யும் இடத்தில் திடீர் பதவி, பாராட்டுகள், வருமான உயர்வு ஏற்படும். புதிதாக துவங்கும் காரியம் ஜெயமாகும். ராணுவம் காவல் சீருடை பணியாளர்களுக்கு ஆதாயம் உண்டாகும். குழந்தைகள் படிப்பில் சிறுது நிதானம் இருக்கும். பரிகாரம்: முருக வழிபாடு, கோழி, சேவல் போன்ற பிராணிகளுக்கு உணவளித்தல்



**சிம்மம்:** ராசியாதிபதி சூரியன் ராசிக்கு 9 மேஷத்தில் உச்சமாக இருக்கிறார். ஆரோக்கியம் மேம்படும், தெளிவான சிந்தனை, திடீர் வருமானம் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். பிள்ளைகளுடன் மனக்கசப்பு ஏற்படலாம் வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது.உத்தியோகம் தொழில் வகையில் முன்னேற்றம் உண்டு. கர்மகாரகன் சனியின் பார்வை அதிகம் உழைக்கவேண்டிவரும் அதன் பலன் எதிர்காலத்தில் கிடைக்கும். குரு சுக்கிரனின் 7ஆம் பார்வையால் குடும்ப நிலவரம் சுமூகமாக இருக்கும். புதிய வீடு, வாகனம் தொடர்பான கடன்கள் சிலருக்கு உண்டாகலாம். இளைய சகோதரர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். பொறுமையாக கையாளவேண்டும். பரிகாரம்: தக்ஷிணாமூர்த்தி வழிபாடு, தர்ம ஸ்தாபனங்களுக்கு உதவி



**கன்னி:** ராசி அதிபதி புதன் ராசிக்கு 9 இல் இருந்து தனது 7 ஆம் பார்வையால் 3 ஆம் வீடான விருச்சிகத்தை பார்வை செய்கிறார். அவ்வளவு சிறப்பான தன்மை இல்லை. உற்சாகம், தைரியம் குறையலாம் நிதானம் அவசியம். பொதுவில் குரு சுக்கிரன் இணைந்து ராசியை பார்ப்பது விஷேச




www.aanmeegamalar.com

நன்மைகள் ஏற்படும். சுக சவுகரியத்திற்கு குறைவிருக்காது. உஷ்ண சம்பந்தமாக உபத்திரவங்கள் சிலருக்கு வந்து போகும். ராசிக்கு 8 இல் சூரியன் சந்திரன் மறைவது சிறப்பல்ல, புதிய முயற்சிகள், மேலதிகாரிகளுடனும் தாயார் தாயார் ஸ்தானத்தில் உள்ளாவர்களுடன் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. கோவத்தை கட்டுப்படுத்தி காரியத்தில் கவனம் செலுத்தவேண்டும். பரிகாரம்: சுப்பிரமணியர் வழிபாடு, சீருடை பணியாளர்களுக்கு, தூய்மை பணியாளாறுகளுக்கு உதவி

**துலாம்:** ராசிநாதன் சுக்கிரன் உச்ச வீடான 6 இல் மறைந்தாலும் 12 ஆம் வீட்டை பார்ப்பதால் அயன சயன போகத்திற்கு குறைவிருக்காது. சுப செலவுகள் நிச்சயம். ராசியில் இருக்கும் கேது பகவானால் இனம் புரியாத கவலை தனிமையை விரும்புவீர்கள். சூரியன் சந்திரனின் 7ஆம் பார்வை ராசியின் மீது விழுவதால் உடல் மன ஆரோக்கியம் மேம்படும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசுப்பணியில் உள்ளவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் முன்னேற்றம் உண்டு. கணவன் அல்லது மனைவி வேலைக்கு செல்பவராக இருந்தால்



பதவி உயர்வு ஏற்படலாம். பரிகாரம்: விஷ்ணு வழிபாடு, படிக்கும் ஏழை குழந்தைகளுக்கு உதவி

**விருச்சிகம்:** ராசிநாதன் செவ்வாய் ராசிக்கு 4 இல் சனியுடன் இணைந்து இருப்பது புதிய பூமி, நிலம் வாங்கும் யோகம் உண்டாகும். வயதில் மூத்தவர்களுடன் வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். தாயார் உடல் நிலையில் கவனம் தேவை. ராசிக்கு 5 இல் குரு சுக்கிர இணைவு குழந்தைகள் வகையில் மகிழ்ச்சியான நிகழ்வுகள் ஏற்படும். விரும்பிய படிப்பு, கல்லூரி செல்லும் மாணவ மாணவிகள் புதிய வாகனம் வாங்கும் வாய்ப்புகள் உண்டாகும். 6இல் மறைந்துள்ள சூரியன் சந்திரனால் உடல் மன ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வேலைக்கு செல்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும் அதனால் பலன் உண்டு. சிலருக்கு புனித யாத்திரை குலதெய்வ கோயில் செல்லும் நேரம் கூடி வரும். பரிகாரம்: மகாலக்ஷ்மி வழிபாடு. வயதான பெண்களுக்கு உதவி



**தனுசு:** ராசிநாதன் குரு ராசிக்கு 4இல் சுக்கிரனுடன் இணைந்து இருப்பது விஷேஷம். தனயோகம், வண்டி, வாகன, ஆபரண யோகம் உண்டு. சுப செலவு, திருமணம் விஷேச வைபவங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்புகள் உண்டு. மூன்றில் உள்ள செவ்வாய் குருட்டு தைரியத்தை தருவார் பொறுமையாக ஆராய்ந்து எந்த புதிய முயற்சியையும் தொடங்குவது நல்லது. 5இல் நின்ற சூரியன் சந்திரன் ராகு குழந்தைகள் வகையில் முன்னேற்றம் எதிர்பாராத வாய்ப்புகள் உண்டாகும். 6இல் புதன் மாணவ, மாணவிகள் பிரயாணத்தில் கவனமாக இருக்க வேண்டும். 11இல் கேது, தாயார் தந்தை ஆரோக்கிய சம்பந்தமாக புதிய கடன்களை சிலருக்கு ஏற்படுத்தலாம் பரிகாரம்: பெருமாள் வழிபாடு. படிக்கும் ஏழை குழந்தைகளுக்கு உதவி



**மகரம்:** ராசியாதிபதி சனி ராசிக்கு 2இல் தொழில் வாக்கு ஸ்தானத்தில் தொழில் நிலை சீராக இருக்கும். ராசிநாதனுடன் இணைந்த செவ்வாய் கோவத்தை கட்டுப்படுத்தி பொறுமையாக இருக்க வேண்டும். 3 இல் நின்ற குரு சுக்கிரன் தொழில் வியாபார விருத்தி மற்றும் தான லாபம் உண்டாகும். வரவேண்டிய கடன்கள் வசூலாக தாமதம் ஏற்படலாம் 10 இல் உள்ள கேது சிறுது அலைச்சலை தருவார். சிலரது குழந்தைகளுக்கு உடல் உபாதைகள் ஏற்படலாம் கவனம் தேவை. தாயார் தந்தை உடல் நிலையில் முன்னேற்றம் உண்டு. பொதுவில் சிறப்பான பலன்களை அதிகம் எதிர்பார்க்கலாம் பரிகாரம்: சுப்பிரமணியர் வழிபாடு, பட்டறை தொழிலாளர்களுக்கு உதவி



**கும்பம்:** ராசியாதிபதி சனியுடன் ராசியில் செவ்வாய் பதட்டம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வருமானம் சீராக இருக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். சகோதர சகோதரிகளுடன் சுமூகமான போக்கு நிலவும். தெரியும் கூடும் எடுத்தகாரியம் ஜெயமாகும். குழந்தைகள் படிப்பில் சிறந்து விளங்குவார்கள் ஆனால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சரியான நேரத்தில் சாப்பிடவேண்டும். கணவன் மனைவி இடையே சுமூக நிலை நீடிக்கும். பணியிடத்தில் மேலதிகாரிகள் ஆதரவாக இருப்பார்கள். தொழிலாளர்கள் நிலை மேம்படும். இன்சூரன்ஸ், வைப்புநிதியில் கணிசமாக இலாபம் கிடைக்கும். பரிகாரம்: ஆஞ்சநேயர் வழிபாடு. வயதானவர்களுக்கு உதவி



**மீனம்:** ராசிநாதன் குரு ராசியில் உச்ச சுக்கிரனுடன் இருப்பது மிகவும் நல்ல விஷேச அமைப்பாகும். உற்சாகம் தெம்பு பிறக்கும். மனைவி, கணவர் வழியில் புதிய ஆடம்பர பொருட்கள் சேர்க்கை ஏற்படும். அன்யோன்யமாக இருப்பார்கள். தாய் தந்தை ஆதரவு உண்டு. பெற்றோரிடம் இருந்து திடீர் உதவிகள் கிடைக்கும். வண்டி, வாகன, வீடு சம்பந்தமாக செலவுகள் ஏற்படலாம். மனநிலை சீராக இருக்கும். உஷ்ண சம்பந்தமாக தொந்தரவுகள் சிலருக்கு உண்டாகலாம். சிறு கடன்கள் ஏற்படும். தொழில், உத்தியோகத்தில் எதிர்பார்த்த இலாபம் உண்டு. தூக்கம் குறையலாம். போதிய ஓய்வு எடுக்கவேண்டும். பொதுவில் நற்பலன்கள் அதிகம். உழைப்புக்கேற்ற நிச்சய பலன் உண்டு. பரிகாரம்: விநாயகர் வழிபாடு. உடல் ஊனமுற்றோருக்கு உதவி



ராமனுக்கு உதவிய அணிலைப் போன்று
ஆன்மிகத்திற்கு எங்கள் சேவை மிகச் சிறியது

# எங்கள் சேவைக்கு
# உங்கள் உதவி தேவை

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்-ஆப்,
இ-புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

## இதுவரை 130 இதழ்களை கடந்துள்ளோம்.

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



**ஆன்மிகமலர் டிரஸ்ட்**
Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# தமிழக மன்னர்கள், சாளுக்கிய மன்னர்கள்

## விரும்பி வழிபட்ட

# வராகி தேவி

தமிழக மன்னர்கள் போலவே சாளுக்கிய மன்னர்களும் வராகி தேவி மீது அளவற்ற பற்றுக் கொண்டவர்களே அவர்கள் தங்களது நாட்டு கொடியின் தேசிய சின்னமாக வராகியின் திருவுருவத்தையை அமைத்து இருந்தார்கள் நூற்றி எட்டு திருப்பதிகளில் ஒன்றான அகோபில மடத்தில் சாளுக்கிய மன்னர்கள் வாராகிக்கான மண்டபத்தை அமைத்திருக்கிறார்கள் இந்திய மன்னர்களில் மிகவும் புகழ் பெற்ற விக்கிரமாதித்தன் இந்த மண்டபத்தை மேலும் அழகு படுத்தி அடிக்கடி இங்கு வந்து தியானம் செய்வானாம் இந்த மண்டபத்திற்கு வேறொரு புகழும் உண்டு சிவ பெருமானை தவிர வேறந்த பெருமானையும் தலைதாழ்த்தி வணங்க மாட்டேன் என்ற உறுதி கொண்ட கிருஷ்ண தேவராய மன்னர் கூட இந்த மண்டபத்தில் உள்ள வராகி தேவியை வழிபட்டதாக வரலாறு கூறுகிறது

நமது தஞ்சை மண்ணில் உருவாகி உலகத்தவர் அனைவரையும் பிரம் மிக்க செய்தவண்ணம் உள்ளபெரிய கோவிலில் வராகிக்கான தனிசன்னதி இருக்கிறது ராஜராஜ சோழனின் ஆன்மிக குருவான கருவூர் சித் தரின் ஆலோசனைப்படி இந்த சன்னதி வைக்கப்பட்டதாகவும் சொல்லப் படுகிறது அதனாலேயேபிற் கால சோழ மன்னர்களில் பலர்வராகி தேவியை குல தெய்வமாகவே வழிபட்டதாகவும்



சில மன்னர்கள் அந்த வழக்கத்தை கைவிட்டதனால் சோழ சாம்ராஜ்யம் அழிந்து போனதாகவும் சொல்கி றார்கள்

வராகி சிவனின் அம்சமாகவும் கருதப்படுகிறாள் திருமாலின் அம்ச மாகவும் போற்றப்படுகிறாள் சைவ சமய சார்புடைய வராகி தேவியின் திருவுரு வத்தில் கலப்பை உலக்கை ஆகியவைகள் காணப்படுகின்றன வைஷ்ண சார்பில் அபய வரத கரங்களே இருக்கின்றன இவை தவிர வழிபாட்டு முறையிலும் மாறுதல்கள் உண்டு முழுமுதல் கடவுளான திருமால் வராக அவதாரம் எடுக்கும் போது திருமகள் வராகியாக வந்தாள் என்று ஸ்ரீவைஷ்ணவ மரபு சொல்கிறது வராகி தேவியை பஞ்சமி நாளில் வழிபடுகிறார்கள் இந்த நாளில் தேவியை வழிபட்டால் கேட்ட வரத்தை தாமதமின்றி உடனே பக்தர்களுக்கு வழங்குவதாக ஐதிகம் இருக்கிறது




ஆதிகால தமிழ்நாட்டில் வராகி வழிப்பாடு இருந்ததை போலவே கொற்றவை வழிப்பாடும் இருந்ததாக தெரிகிறது.

சங்ககால தமிழ் இலக்கியங்கள் கொற்றவையை வீரத்திற்கும் வெற்றிக்கும் உரிய தேவதையாக வர்ணனை செய்கின்றன இந்த கொற்றவை வழிப்பாடே நாளடைவில் துர்க்கை வழிப்பாடாக பரிணாமம் எடுத்தது துர்க்கை துர்க்கம் என்ற வார்த்தைகள் அகழி என்ற பொருளை தரும் ஒரு கோட்டையை சுற்றி இருக்கும் அகழி எப்படி பகைவர்களை உள்ளே விடாமல் தடுக்கிறதோ அது போலவே அன்னை துர்க்கையானவள் வாழ்க்கை என்ற கோட்டைக்குள் துயரம் என்ற பகைவராமல் பாதுகாக்கிறாள்

நாடாளும் மன்னர்களும் நாட்டை பாதுகாக்கும் வீரர்களும் வழிப்படும் மூர்த்தியாக திகழும் துர்க்கா



கொற்றவை



வராகி தேவி

தேவி ஐப்பசி மாதத்தில் வரும் நவராத்திரி பண்டிகையில் பார்வதி லஷ்மி சரஸ்வதி ஆகிய மூன்று தேவிகளின் ஒரே வடிவமாக காட்சி தருகிறாள் அதனால் தான் நவாத்திரி பூஜை துர்க்கா பூஜை என்ற சிறப்பு பெயரை பெறுகிறது துர்க்கா தேவி சூரியகலை சந்திரகலை அக்னிகலை போன்ற யோக நாடிகளாகவும் உருவகப்படுத்தப் படுகிறாள்

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியான அன்னை ஆதிபாரா சக்தியின் வழிபாட்டில் மஹிசாசூர மர்த்தினி வழிப்பாடு மிகவும் சக்தி வாய்ந்த வழிபாடாகும் தமிழ் நாட்டு மக்கள் மட்டும் அல்லாது இந்திய மக்கள் அனைவராலும் ஏற்று போற்றி வழிப்படும் வழிப்பாடாகும் இது மஹிசாசூர மர்த்தினி வழிபாட்டை மிக தொன்னமை காலம் முதலே செய்து வருகிறார்கள் சிலப்பதிகாரத்தில் வரும் வேட்டுவவரி என்ற பாடல் வரிசையில் மஹிசாசூர மர்த்தினியின் புகழ் பாடப்படுகிறது

ஆணைத்தோல் போர்த்துப் புலியின்
உரியுடுத்துக்
காணத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுகின்றியே நிற்பாய்!

என்ற சிலப்பதிகார வரி ஏறுமை மாட்டு தலையுடைய அசுரனை அன்னை போரிட்டு அழித்த விதத்தை கவிநயத்தோடு விவரிக்கிறார் இந்த வர்ணனையை அடிப்படையாகக் கொண்டே பிற்காலத்தில் மஹிசாசூர மர்த்தினியின் திரு வுருவ சிலைகள் வடிவமைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

இது தவிர நமது தமிழ்நாட்டிலும் மற்றும் பல இந்திய மாநிலங்களிலும் அன்னை பாலாம்பாள் லலிதாம்பாள் ராஜராஜேஸ்வரி நவாட்சரிபாலா அன்னபூரணி அசுவரூடாம்பாள் ராஜமாதங்கி லகுசியமளா வாக் வாதினி நகுளி புவனேஸ்வரி சண்டி வனதுர்க்கை வைஷ்ணவி மாரியம்மன் கங்கையம்மன் பத்திரகாளியம்மன் போன்ற இன்னும் பல பெயர்களால் அன்னை வணக்கப் படுகிறாள் இந்த வழிப்பாடுகளில் சில முறைகள் சாக்த மதத்ற்கு சம்பந்தம் இல்லாமல் நாட்டுபுர மக்களின் பண்பாட்டோடு சம்மந்தப்பட்டதாக இருக்கலாம் ஆனாலும் கூட அவைகளில் தெய்வீகமான அன்பு பளிச்சிடுவதால் அதையும் கூட சாக்த மதம் தன்னோடு அரவணைத்து கொள்கிறது

அன்னை வழிபாட்டில் உயிர்பலி என்பது மிகவும் பழைய காலத்திலிருந்தே நடைமுறையில் இருக்கிறது இதுவும் சாக்த வழிபாட்டிற்கு சம்மந்தம் இல்லாத வாமசார முறையாகும் ஆனால் காலபோக்கில் பலியிடுதல் என்பதும் அன்னை வழிபாட்டில் ஒரு அங்கமாகிவிட்டது வாமசாரமும் சாக்த நெறியும் பல இடங்களில் பின்னி பிணைந்து இருப்பதனால் தனித்தனியாக பிரித்து அடையாளம் காண பலராலும் முடிவதில்லை இருந்தாலும் தூய சாக்த நெறியின் தனிவழிபாடு என்றால் அது ஸ்ரீ சக்ர வழிபாடே ஆகும் அதை பற்றிய தத்துவ விவரங்களை அடுத்த அத்தி யாயத்தில் காண்போம்.

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**

மேலும் தொடர்பு கொள்ளவும் **போன்: 09442426434**

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள், புக் ஓர்க், அட்டைப்பட வடிவமைப்பு, போன்றவை தரமாகவும் குறைந்த செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics செல்: +91-9444228203

# பூலோக ஐஸ்வரியம் தரும் இந்திரன்




கிழக்குத் திசை, விடியலுக்கும் சூரியோதயத் திற்கும் பெயர் பெற்ற கிழக்குத் திசைக்கு அதிபதி, இந்திரன். தேவர்களின் தலைவன் இவரே அஷ்டதிக் பாலகர்களின் தலைவர். இவர் கிழக்கை ஆள்பவர்.

வெள்ளை யானை தான் இவரது வாகனம். வஜ்ரம் என்னும் ஆயுதத்தை இவர் தாங்கி இருப்பார். இந்திரனின் மனைவி இந்திராணி. தேவர்களுக்கு மட்டுமின்றி, அஷ்டதிக்குகளுக்கும் அஷ்டதிக் பாலகர்களுக்கும் தலைவன் இவர். இவரை வேதங்கள் தேவர்களின் தலைவர் என்றும் சித்தரித்துக் கூறுகிறது.

இவரை வணங்குவதால் சகல ஐஸ்வரியத்தையும் சுகத்தையும் பெறலாம். அதாவது பூமியிலேயே சொர்க்கத்தைக் காணலாம். வழிபடும் போது இந்திரனை நினைத்து வேண்டிக்கொண்டால், சகல வளமும் நலமும் கிடைக்கப் பெறலாம். நோய் நொடியில்லாமல் ஆரோக்கியத்துடன் வாழலாம். தீராத நோயையும் தீர்த்துவைப்பார் இந்திரன். அப்படிப் பட்ட இந்த இந்திர பகவானின் தியான ஸ்லோகம்

"ஓம் சஹஸ்ர நேத்ராய வித்மஹே வஜ்ர ஹஸ்தாய தீமஹி
தன்னோ இந்திர ப்ரசோதயாத்."

இந்த ஸ்லோகத்தை சொல்ல நன்மைகள் அதிகம் கிடைக்கும்.

## aanmeegamalar.com வழங்கும்
# தினம் ஒரு திருக்குறள்





ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள். aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்








# ஆன்மிக உலகின்

# முதல் இலவச

# இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி

aanmeegamalar.com

aanmeegamalr (app)–ல்

படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**உடல் நலம் பேணி காப்போம்**

# உண்மையான அன்பின் மந்திரசக்தி

அன்பு குருதேவர் அருளுகிறார்: "எதிர்மறை மனநிலைகள் ஒருவரின் உணர்ச்சிகளையும் புரிந்துகொள்ளுதலையும் கூர்மையிழக்கச்செய்து, மற்றவர்களுடன் ஒத்துப்போவதை சாத்தியமில்லாமல் செய்து விடுகின்றன. இல்லற வாழ்க்கை சுவர்க்கத்தின் ஓர் ஆலயமாக இருக்க வேண்டும். ஆனால் மனநிலைகள் அதை நாசமாக்கிவிட முடியும். கணவன் வீட்டிற்கு வருகிறான். மனைவி கடுகடுப்பான மனநிலையில் இருப்பதைக் காண்கிறான். அதனால் அவளிடம் வாதிட முடிவதில்லை. அல்லது அவன் ஒரு வெறுப்பூட்டும் மனநிலையில் அலுவலகத்திலிருந்து வருகிறான். அவனால் அவளிடம் வாதிட முடிவதில்லை. மனநிலைகளின் காரணமாக மக்களுக்கு இவ்வளவு தொல்லைகள் ஏற்படுகின்றன!"

அவர் தொடர்கிறார்: "உங்களுடைய குடும்பத்தில் உள்ள யாரோ ஒருவர் கோபத்தில் கொதித்துக்கொண்டோ அல்லது முழுவதுமாக அலட்சியமாகவோ இருந்தால், அவருடைய மனநிலையால் நீங்கள் உடனடியாகப் பாதிக்கப்படுகிறீர்கள். அல்லது ஒருவேளை நீங்கள் பெரும் சந்தோஷத்தில் வேறொருவரிடம் செல்கிறீர்கள். ஆனால் அவர் மகிழ்ச்சியற்ற மனோ பாவத்துடனும் சண்டையிடும் நிலையிலும் இருந்து இறுதியில் உங்களை ஓர் அறை விடுகிறார். உடனடியாக உங்கள் மகிழ்ச்சி மறைந்துவிடுகிறது. மேலும் நீங்கள் பதிலடி கொடுக்க நினைக்கிறீர்கள். மற்றொருவரின் மனநிலையை மேற்கொள்ளாதீர்கள். ஒருவர் நம்மை இடது கன்னதில் அறைந்தால் பதிலுக்கு நாம் வலது கன்னத்தைத் திருப்பவேண்டும் என புனித நூல்கள் கூறுகின்றது. எத்தனை பேர் அவ்வாறு




129
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக


குருப்ரியா

செய்கின்றனர்? பெரும்பாலும் அடிபட்டவர், தன்னை அறைந்தவரைப் பன்னிரண்டு தடவை பதிலுக்கு அறைவதுடன், மேலும் ஓர் உதையையும் அல்லது கூடவே ஒரு துப்பாக்கிக் குண்டையும் பாய்ச்ச விரும்புகிறார்! திருப்பி அடிப்பது எளிதானது. ஆனால் உங்களைத் துன்புறுத்துகின்றவரை நிராயுதபாணியாக்க முயல்வதற்கு அன்பைக் கொடுப்பதே மிக உயர்ந்த மார்க்கம். அச்சமயத்தில் அது செயல்படாவிட்டாலும் அவர் உங்களை ஓர் அறைவிட்டபோது, நீங்கள் பதிலுக்கு அன்பைக்கொடுத்ததை ஒருபோதும் அவர் மறக்கவே மாட்டார். அந்த அன்பு மனப்பூர்வமானதாக இருக்க வேண்டும். அது இதயத்திலிருந்து வரும்போது அன்பானது மந்திரசக்தி கொண்டதாகும். அதன் விளைவுகளை நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது; உங்கள் அன்பு புறக்கணிக்கப்பட்டாலும் அதை நீங்கள் கண்டுகொள்ளாதீர்கள். அன்பைக் கொடுத்து மறந்து விடுங்கள். எதனையும் எதிர்பார்க்காதீர்கள். பிறகு அதன் மந்திரசக்தியை நீங்கள் காண்பீர்கள்.”

மேலும் அவர் அருளுகிறார்:

“மிகச்சிறந்ததோர் பூந்தோட்டம் உங்களுக்குள் உங்கள் ஆன்மாவில் இருப்பதை நீங்கள் அறிவீர்களா? இம்மணில் வளரும் எந்த மலர்களையும்விட அழகிற்சிறந்த அன்பு, நற்குணம், புரிந்துகொள்ளுதல் மற்றும் சாந்தம் ஆகிய நறுமணம் கமழும் எண்ணங்களால் ஆன ஓர் அற்புதப் பூந்தோட்டம் அது, கோபத்திலிருக்கும் ஒருவர் உங்களைத் தவறாகப் புரிந்துகொண்டபோதெல்லாம், அவருக்கு நீங்கள் தொடர்ந்து அன்பைத் தந்தபோது நீங்கள் ஒரு நறுமணம் வீசும் மலரை பயிர் செய்துள்ளீர்கள். அந்த அன்பு மற்றும் புரிந்து கொள்ளுதலின் நறுமணம் எந்த ஒரு ரோஜா மலரின் நறுமணத்தையும் விட அதிகம் நீடித்திருக்குமல்லவா? எனவே உங்கள் மனதை ஒரு பூந்தோட்டமாக எண்ணி, அதை தெய்வீக எண்ணங்களுடன் அழகானதாகவும், நறுமணமுடையதாகவும் வைத்திருங்கள்; அதை துர்நாற்றமுள்ள வெறுப்பு மிகுந்த மன நிலைகளால், களைகள் அடர்ந்த ஒரு சேற்றுக்குட்டையாக மாற விடாதீர்கள். நீங்கள் தெய்வமணம் கமழும் மலர்களான அமைதி மற்றும் அன்பு ஆகியவற்றைப் பயிரிட்டீர்களானால், கூடஸ்தசைதன்யம் (நெற்றிக்கண்) ஸ்ரீ படைப்பில் வெளிப்பட்டுள்ள இறைவனின் எங்கும் நிறைந்துள்ள அறிவுத்திறம் மற்றும் அவனுடைய அன்பின் கவரும் சக்தி என்ற தேனீ உங்கள் பூந்தோட்டத்தில் இரகசியமாக நுழையும். தேன் நிறைந்த இனிப்பான மலர்களை மட்டும் தேனீ நாடுவதைப்போன்று இறைவனும் உங்களுடைய வாழ்க்கை, தேன் நிறைந்த எண்ணங்களால் இனிப்பாக இருக்கும்போது மட்டுமே வருகின்றான். உங்களுடைய நல்ல ஆன்மீகப்பண்புகளின் பூந்தோட்டத்தில், தீய, துர்நாற்றமுள்ள கோபமெனும் களையை வளரவிடமாட்டீர்கள் என உறுதி செய்யுங்கள். மலர் போன்ற தெய்வீகப் பண்புகளை நீங்கள் எவ்வளவு அதிகம் விருத்தி செய்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக இறைவன் உங்களுடைய ஆன்மாவில் தன்னுடைய இரகசியமான, எங்கும் நிறைந்துள்ள தன்மையை உங்களுக்கு வெளிப்படுத்துவான்.”

“எவன் ஒருவன் நண்பன் மற்றும் எதிரியின் முன் வணங்கப்படும் போதும், அவமரியாதைப்படுத்தப்படும்போதும்,







மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

வெப்பம், குளிர் மற்றும் இன்ப, துன்ப அனுபவங்களின்போது அமைதியாக உள்ளானோஞ்ஞ். அவனே எனது அன்பிற்குரியவன்". என்று பகவான் கிருஷ்ணன் பகவத் கீதை அத்.12 ஸ்லோகம் 1819ல் கூறியுள்ளார். அன்பற்றவர்களுக்கு அன்பையும், கலலையால் அலைக்கழிக்கப்படுபவர்களுக்கு அமைதியையும், இரக்கமற்றவர்களுக்கு இதயத்தையும், துன்பங்களால் சுமையுண்டவர்களுக்கு மகிழ்ச்சியையும் தொடர்ந்து கொடுத்துக்கொண்டும்; தவறான பாதையை பின்பற்றுபவர்களுக்கு எப்பொழுதும் ஒரு நல்ல உதாரணமாகத் திகழ்ந்துகொண்டும் இருப்பதன் மூலம் உங்கள் மனதை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தி வைத்திருப்பதால், நீங்கள் மனநிலைகளை அழிக்கிறீர்கள். நீங்கள் புறத்தே சுறுசுறுப்பாக இருக்க முடியாதென்றால் அகத்துள் ஆக்கபூர்வமாக சுறுசுறுப்புடன் இருங்கள்," என்கிறார் அன்பின் சிகரமாகின்ற குருதேவர்.

'உண்மையான அன்பின் மந்திர சக்தி' என்று தலைப்பில் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இதில் கண்ட, குருதேவருடைய போதனைகளுக்கு ஏற்ப ஒரு கதையை அதாவது "எதையும் ஏற்கும் அன்பு" என்ற தலைப்பிட்ட கதையை கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளேன்.

எதையும் ஏற்கும் அன்பு.

வழக்கம்போல் ஒரு மகான் தம் சீடர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அங்கு வந்த முதிய பெண்மணி ஒருவர் கூடை ஒன்றை அவரிடம் தந்தாள். "என் தோட்டத்தில் விளைந்த திராட்சைப் பழங்களைத் தங்களுக்காகக் கொண்டு வந்தேன்" என்றாள். அதிலிருந்து ஒரு பழத்தை எடுத்து வாயில் போட்டார் அந்த மகான். அந்தப் பெண்மணியிடம் சிரித்துப்பேசிக்கொண்டே ஒவ்வொரு பழமாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். இதைக் கவனித்தார்கள் சீடர்கள், எந்த உணவுப் பொருள் அன்பளிப்பாக வந்தாலும் நமக்கு எல்லாம் பகிர்ந்து அளித்த பின்னரே மகான் உண்பார். ஆனால் இன்று திராட்சைப் பழங்களைத் தாமே உண்கிறார். நமக்குத் தரவில்லை. என்ன காரணமாக இருக்கும்? என்று தங்களுக்குள் மெல்லப் பேசிக் கொண்டனர்.

திராட்சைக்கூடையும் காலி ஆயிற்று அந்தப் பெண்மணியும் மகிழ்ச்சிப் பெருக்குடன் மகானிடம் விடை பெற்றாள். ஆர்வத்தை அடக்கமுடியாத சீடர் ஒருவர், "பெருமானே, இன்று வழக்கத்திற்கு மாறாக எல்லாப் பழங்களையும் தாங்களே, உண்டீர்கள். எங்களுக்கு ஒன்றும் தரவில்லையே" என்று கேட்டார். அதற்கு அவர் "அந்த முதிய பெண்மணி அன்புடன் திராட்சைப் பழங்களைக் கொண்டு வந்தார். அதில் ஒன்றை எடுத்து வாயில் போட்டேன். கடுமையான புளிப்பு. உங்களிடம் பழத்தைத் தத்திருந்தால் உங்கள் முகம் எப்படியும் பழத்தின் புளிப்பைக் காட்டியிருக்கும். அதைக்கண்ட அந்த முதிய பெண்மணியின் உள்ளம் வருந்தியிருக்கும். அதனால்தான் சிரித்துக் கொண்டே எல்லாப் பழங்களையும் நானே உண்டுவிட்டேன்" என்று விளக்கம் தந்தார்.

இந்தக் கதை, யார் மனதையும் புண்படச் செய்யக்கூடாது என்பதை எடுத்துக்கூறுகிறது. அதே போன்று, அனைத்து மலர்களையும்விட சிறந்த அன்பும் அழகும் நற்குணமும் புரிந்து கொள்ளுதல் ஆகிய நறுமணமுடைய எண்ணங்களால் ஆன பூந்தோட்டம்தான் ஆன்மா. எனவே நம் மனதை ஒரு பூந்தோட்டமாக எண்ணி அதை தெய்வீக எண்ணங்களுடன் நறுமணமுடையதாக வைத்திருக்கச் சொல்கிறார் குருதேவர். அனைத்து ஆன்மாக்களும் இவ்வாறான பூந்தோட்டமாக இருப்பதால் அதிலிருந்து உருவாகும் நறுமணமுடைய மலர்களை எக்காரணத்தைக் கொண்டும், வெறுப்பு மற்றும் காம, குரோத, லோப, மோக, அகங்காரங்கள் என்னும் தீய குணங்களால் வீணாக்காமலிருக்கவேண்டும்.

மலர்கள் மலரும் செடிகளுக்கு நல்ல நீர் ஊற்றினால் அவை ஆரோக்கியமாக வளரும். மாறாகச் செய்தால் அவை அழிந்து விடும். எனவே யார் மனதையும் புண்படச்செய்யாமல் இருக்கவேண்டும், உண்மையான அன்புதான் அனைத்திற்கும் சிறந்தது, உண்மையான அன்புதான் மந்திர சக்தி.

உண்மையான அன்பு உள்ளம் கொண்ட ஒரு கணவன் மனைவி அல்லது இரு நண்பர்கள், அவர்களின் வார்த்தைகள் ஒன்றுக்கொன்று கட்டுப்பட்டிருக்கும். அவர்களுடைய பேச்சு ஏதோ ஒன்றை ஈர்க்கும். அந்த ஈர்ப்பு உண்மையான அன்பினால் ஏற்படுவதாகும். எனவே தீய எண்ணங்களை கைவிட்டு உண்மையான அன்பை பரவவிட்டால் அங்கே இறைவனின் அன்பாகின்ற மந்திரசக்தி இணைந்து அவ்விடம் சுவர்க்கமாகிவிடும். அதற்கு மனிதன் ஒவ்வொருவரும் தீய குணங்களை அகற்றி நல்ல குணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909








# நொய்டாவில் ஸ்ரீ ராதா கிருஷ்ணா கல்யாண மஹோத்ஸவம்

ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாம சத்சங்கம், ரெஜிடி., NOIDA (VSS), கடந்த இருபத்தாறு ஆண்டுகளாக ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணத்தை வாராந்திர அடிப்படையில் செய்து அதன் 27 வது ஆண்டில் நுழைந்துள்ளது.

கடந்த, ஏப்ரல் 23–24 ஆகிய இரண்டு நாட்களுக்கு "ஸ்ரீ ராதா கிருஷ்ணா கல்யாண மஹோத்ஸவத்தை" VSS ஏற்பாடு செய்தது. இந்த கல்யாண மஹோத்ஸவம் பஜனை சம்பிரதாயத்தில் "கலைமாமணி டாக்டர் உடையாளூர் ஸ்ரீ கல்யாணராம பாகவதர் – அவரது மண்டலி" அவர்களால் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சிகள் நொய்டாவில் உள்ள செக்டார் 50 சமூக மையத்தில் நடைபெற்றன.

பிரபல இசைக் கலைஞரும் குருவுமான ஸ்ரீமதி அம்பிகா ஸ்ரீகாந்த் மற்றும் அவரது மாணவர்கள் தலைமையில் ஏப்ரல் 23, 2022 அன்று காலை நடைபெற்ற அவரது பஞ்சரத்ன கிருதிகளின் குழுப் பாடலின் மூலம் சத்குரு ஸ்ரீ தியாகராஜர் தினத்தையும் VSS ஏற்பாடு செய்தது.

வேதமந்திர முழக்கங்களுக்கிடையில் ஸ்ரீ மகா கணபதி ஹோமம், முகூர்த்தக்கால், ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதம், விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம், ஸ்ரீ தியாகராஜரின் பஞ்சரத்ன கிருதிகள், நாம சங்கீர்த்தனம், தோதயமங்கலம், குரு தியானம், அஷ்டாபத்யானம், அஷ்டாபத்யானம், அஷ்டாபத்யானம், அஷ்டாபாதியானம் ஆகிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து இரண்டு நாட்கள் நடைபெற்றன.

ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம், அதைத் தொடர்ந்து ஜனவாசம், நாம சங்கீர்த்தனம் தியானம், பூஜை, டோலோத்ஸவம், உஞ்சவிருத்தி, திவ்ய நாமம் மற்றும் "ஸ்ரீ ராதா கிருஷ்ணா கல்யாண மஹோத்ஸவம்", அதைத் தொடர்ந்து அன்னதானம், ஸ்ரீ ஆஞ்சநேய உற்சவம், மங்கள ஹாரதி, தொடர்ந்து நடைபெற்றது.


எஸ்.வெங்கடேசன்

நொய்டா மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள், இரண்டு நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, பஜனைகளை மகிழ்ந்தனர். நொய்டா மற்றும் டெல்லி பகுதிகளில் உள்ள பல்வேறு சபா உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா,
போன்: 9811161370

# குபேர திசையில் காட்சிதரும்

# குபேரஅனுமன்




ஸ்ரீ இராமபக்தரான ஆஞ்சநேயரின் பிறப்பே அபூர்வமானது. அனுமனின் லீலைகளும் அவர் புரிந்த அற்புதங்களும் சொல்லில் அடங்காதவை. இராம நாமம் ஜெபிப்பவர்களுக்கு என்றும் உறு துணையாக இருந்து அவர்களது துயரங்களைப் போக்குவதில் அனுமரை விடவும் சிறந்தவர் எவரும் கிடையாது.

அப்பேர்ப்பட்ட அஞ்சனை மைந்தனான ஸ்ரீ ஆஞ்சநேயர் இந்த மண்ணுலகில் எண்ணற்ற திருத்தலங்களில் மாறுபட்ட கோலங்களில் எழுந்து, ஸ்ரீஇராம பக்தர்களின் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

அவ்வகையில் இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை நகரின் கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு என நான்கு திசைகளிலும் கோவில் கொண்டெழுந்து அருள்பாலித்துவருகின்றார்.

அவற்றுள் நகரின் வடக்குதிசையில் ஸ்ரீகாமாட்சிபுரத்தில் எழுந்தருளும் அனுமன் மிகவும்பிரசித்தம். வடக்கு திசையான குபேர திசையில் இவர் கோயில் கொண்டிருப்பதால் பக்தர்களால் இவர் ஸ்ரீ குபேர வீர ஆஞ்சநேயர் என்று அழைக்கப்படுகின்றார்.

ஆதியில் அகத்தியர் ஸ்தாபித்த சிவாலயம் இங்கு இருப்பது சிறப்பு. முன்னொரு காலத்தில் இந்தப் பகுதியில் வாழ்ந்த பலர் பலவித நோய்களால் அவதியுற்றனர்.

அப்போது ஆற்காட்டை சுற்றி வாழ்ந்த மகான்கள் சிலரது சிந்தனைக்கு எட்டியது இந்தத் தகவல். அவர்களது ஆலோசனைப்படி வாலாஜாபேட்டையில் நான்கு திசைகளிலும் நான்கு ஆஞ்சநேயர் ஆலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, பூஜைகள் நடத்தப்பட்டது. அதன்பின் பலரது வியாதிகள் நிவர்த்தி அடைந்துள்ளது.

இன்றும் இந்த நிகழ்வை பலர் நினைவு கூறுவது அஞ்சனை மைந்தருக்கே வெற்றி. சுமார் 1000 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த ஆஞ்சநேயர் பூமியில் இருந்து கிடைக்கப் பெற்றவர்.

தனது இடது கரத்தை இடுப்பில் ஊன்றியவாறு கதாயுதத்துடன் வலது கரத்தை மேல்நோக்கி வைத்தபடி தனது திருமுகத்தை ஆகாயம் பார்த்த வண்ணம் திருக்கோலம் கொண்டுள்ளார். இவருக்கு கீழே ஸ்ரீஇராமர் பாதம் உள்ளது சிறப்பு. இவரது வால் தலைக்குமேல் சுழன்று நிற்கும்


www.aanmeegamalar.com

வாலின் நுனியில் மணி ஒன்று இருக்கும். இவ்வகை அமைப்பிலான அனுமன் சிலை ஸ்ரீ மத்வாச்சாரியார் ஸ்தாபித்தது என்பர். இந்த கோலத்தை பிற தலங்களில் காண இயலாது.

வடக்கு முகம் பார்த்த சிறியதொரு ஆலயம். ஆலயத்தின் எதிரே விஜயநகர மன்னர்களால் ஏற்படுத்தப்பட்ட திருக்குளம் அமைந்துள்ளது. அதோடு, இவ்வாலயத்தில் நாகராஜர் சிலைகளும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது விசேடம்.

இவ்வாலய திருப்பணியின்போது பத்தினி மற்றும் வாகனத்துடனான நவகிரகங்கள், நவ கிரக கோட்டை என்னும் பெயரில் ஸ்தாபிக்கப்பட உள்ளது.

அதோடு ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் மற்றும் ஸ்ரீ மஹா பெரியவா தியான மண்ட பமும் நிறுவப்பட உள்ளது.

ஸ்ரீ மஹா பெரியவா தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அனு மனை வணங்கும்படியும், ஸ்ரீஇராம நாமத்தை ஜபிக்கும்படியும், ஸ்ரீஇராம ஜெயம் எழுதும்படியும் பலமுறை வலியுறுத்தியுள்ளார்.

அவரது வாக்கின்படி அன்பர்கள் குறைந்தது 1008 முறையாவது ஸ்ரீஇராமஜெயம் எழுதி இவ்வாலய முகவரிக்கு அனுப்ப வேண்டும். எந்த மொழியிலும் எழுதி அனுப்பலாம். இராம பக்தர்களின் ஒரு கோடி இராமநாம மந்திரத்தை எதிர்நோக்கியுள்ளனர் விழாக்குழுவினர்.


மோ.கணேஷ்

அவ்வாறு ராமநாமம் எழுதி, இவ்வாலய திருப்பணிக்கும், சம்ப்ரோக்ஷணத்திற்கும் வலி மை கூட்ட வேண்டும் என்பது இப்பகுதி வாழ் மக்களின் பெரும் கோரிக்கையாகும்.

செல்வம், ஆரோக்கியம் கடன் நிவர்த்தி, வியா பாரம், உத்தியோகம், திருமணம், பிள்ளைவரம், சனிதோஷ நிவர்த்தி போன்ற பல கோரிக்கைகள் நிறைவேற ஸ்ரீ குபேர வீர ஆஞ்சநேயரை வேண்டி நிற்போம்.

திருப்பணியில் பங்கு கொண்டு ஸ்ரீஇராமபிரானின் திருவருள் பெற்று வாழ்வில் சிறந்திடுவோம். மொபைல் நம்பர்: 6379101306.

ஜோதிட கலாநிதி
பழங்காமூர் மோ.கணேஷ்
குருக்கள், ஆரணி, தொடர்புக்கு:
9789156179

# புதுச்சேரி ஞானாலயம் வழங்கும் இலவச கர்ம வினை நீக்கும் பயிற்சி

கலியுகத்தின் எல்லையில் வாழ்ந்து கொண் டிருக்கும் நாம் எவ்வாறு இந்த உடல் பிணிகளில் இருந்தும், வாழ்க்கை துன்பங்களில் இருந்தும் விடுபடுவது என்பதே பெரும்பான்மையான மக்களின் தேடுதலாக உள்ளது.

இதற்கு காரணம் முற்பிறவியிலோ அல் லது இப்பிறவியிலோ செய்த கர்மா வினை என்று அறிந்தாலும் அதனை நீக்குவது எங் கனம் என்று தவிப்புருப்பவர்களுக்கு ஒரு வரப்பிரசாத மாக அமைத்திருப்பது புதுச்சேரியில் உள்ள ஞானாலயம் என்னும் திருத்தலம் ஆகும்.

இக்கோவிலில் உள்ள அணையா தீபத்தில் சப்த ரிஷிகளும், சித்தர்களும், முருகப்பெருமான், மகா அவதார் பாபாஜி, திருவருட்ப்ரகாச வள்ள லார், ஷீர்டி சாய்நாதர் மற்றும் நூற்றுக்கும் மேற் பட்ட உயர் தெய்வீக ஆற்றல்கள் ஒளி ரூபத்தில் இறங்கியுள்ளனர்.

அவ்வுயர் ஆற்றல்கள், இதுவரை எங்கும் வெளியிடப்படாத ஆன்மீக இரகசியங்களையும், மூளையில் உள்ள ஆன்மா பற்றியும், சூரிய ஒளியில் உள்ள ஆற்றல்கள் குறித்தும் பல விஞ் ஞான பூர்வமான தகவல்களை கடந்த ஆறு வருடங்களாக ஞானாலய குரு அன்னையின் முதல் சீடர் அவர்களின் சிந்தனையின் வாயிலாக உரையாடி தெரிவித்த வண்ணம் உள்ளனர். அவையாவும் ஞானாலயத்தின் நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், உயர் ஆற்றல்களின் வழிகாட்டுதலின் படி கர்ம வினை நீக்கும் எளிய இலவச பயிற்சி வகுப்பும் சென்னையில் மே 8 ஆம் தேதி நடை பெற உள்ளது.

ஞானாலயத்தின் ஞான குரு ஸ்ரீ சக்தி பாலன் அவர்கள் இந்த பயிற்சி வகுப்பை வழங்க உள்ளார். இதில் கலந்துகொண்டு ஆகம வேதத்தின் ஞான இரகசயங்களை அறிந்து எண்ணங்களின் வலிமையால் வாழ்க்கையை மாற்றி அமைத்து பயன்பெறுமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தொடர்ந்து நவக்கிரக ஆற்றலை ஈர்தளிக்கும் "ஸ்ரீ ரேணுகாதேவி மந்திர உபதேச மும்" வழங்கப்படும்.

நாள்: மே 8ஆம் தேதி காலை 10.12.மணி.

இடம்: சென்னை தியாகராய நகரில் (திநகரில்) உள்ள கிருஷ்ண காண சபா. அனுமதி இலவசம். மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க 9150255585



எங்கள்
சேவைக்கு
உங்களின்
உதவி தேவை



# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் ரூ.10 முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**




**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

# சூரியன் வழிபடும் அம்மன்





www.aanmeegamalar.com

திருச்சி மாவட்டம் கொள்ளிடம் ஆற்றகரையில் மூங்கில்காடு என்னுமிடத்தில் சூடத்தில் அக்னியாக பிறந்து சூலமாக காட்சி அளித்தாள் அன்னை.

150 ஆண்டுகளுக்கு முன்பு தேனி மாவட்டம் தாடிசேரி அரண்மனையில் மேற்படி அம்மனை பிரதிஷ்டை செய்து வழிபடத் துவங்கினர்.

நாட்கள் செல்ல செல்ல ஊரில் ஏற்பட்ட இயற்கை சீற்றத்தால் பசி, பஞ்சம், காலரா நோய் தாக்கம் போன்ற காரணத்தால் அரண்மனை முழுவதும் பஞ்சத்தால் தகித்து சிறிது சிறிதாக அழிந்து விட்டது.

இந்த பஞ்சத்தில் இருந்து தப்பித்த ஒருசிலர் தேனி மாவட்டம் சின்னமனூர் அருகில் உள்ள மூர்த்திநாயக்கன்பட்டியில் இடம்பெயர்ந்தனர்.

நாட்கள், மாதங்கள், வருடங்கள் செல்லச் செல்ல மீண்டும் தாடிசேரி சென்று அம்மனை வழிபட்ட இடத்தில் இருந்து சிறிது கைப்பிடி மண் எடுத்துக்கொண்டு, மூர்த்திநாயக்கன்பட்டியில் சிறியதாக ஆலயம் எழுப்பி வழிபட்டுவந்தனர்.



பி.ஜெயராமன்

இவ்வாறு உருவான அம்மன் ஊர் மக்களுக்கு கேட்கும் வரத்தை கொடுத்து மிகுந்த சக்தி வாய்ந்த அம்மனாக விளங்கினாள்.

100 ஆண்டுகள் பழமையான அம்மன் சன்னதிக்கு சமீபத்தில் ஒருசில வருடங்களுக்கு முன்பு இராஜகோபுரம் அமைத்து ஊர்மக்கள் விழா எடுத்து சிறப்பாக வழிபட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு வருடமும் மாசிமாதம் 2ம் தேதி மூன்றுநாட்கள் திருவிழா எடுத்து வழிபடுகின்றனர். அம்மன் குறி சொல்லும் நிகழ்வும் நடைபெற்று வருகிறது. தற்போது இராஜகோபுரம் கட்டிய பின் கடந்த மூன்று ஆண்டுகளாக அம்மன் மீது சூரிய ஒளி படும் நிகழ்வு தன்னிச்சையாக நடைபெறுகிறது.

இது எவ்வாறு நடைபெறுகிறது என்று தெரியவில்லை, ஆனால் சூரியபகவான் அம்மனை வழிபடுவதைப்போன்று தத்ரூபமாக, சூரியஒளி அம்மன் பாதங்களில் விழுந்து வணங்குவதைப்போன்ற நிகழ்வு நடைபெறுகிறது.

இந்த நிகழ்வு கடந்த 2022 ஏப்ரல் மாதமும் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஊர்மக்கள் இந்த அரிய காட்சியை கண்டு அம்மனை வழிபட்டு சென்றனர். இக்கோவில் பற்றி மேலும் அறிந்து கொள்ள பி.ஜெயராமன் போன் 7601937794 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

# பிறரை வெறுக்கச் செய்கின்ற செயல் பாபமே

நமது பெற்றோர்களுக்கு நமது பிறவி அல்லது நாம் ஒரு பெருந்தன்மையை கொடுப்பதாய் இருக்க வேண்டும். உணர்ச்சி பிழம்பான மனிதனே சற்றோ அல்லது பெரிதளவிலோ கெட்டவனாக இருப்பான்.

❖❖❖

முற்றிலும் உண்மையை உணருதல் என்ற வழியே பேரறிவை யும் கடவுளையும் தெரியும்படியாக செய்கிறது. இதற்கு நல்ல தன்மைகள் வேண்டும்.

❖❖❖

கடவுளை உணருவதற்கு நற்குணம் அல்லது நல்ல தன்மை வேண்டும். கெட்ட குணம் உள்ள மக்கள் உலகத்தில் ஒவ்வொரு விஷயத்திலும் பெரிதளவு பாடுபடுவார்கள். துன்பப்பட்டு எதையும் அடைவார்கள். இதுவே அவர்களின் உலகம் கௌதமபுத்தர் இத்தகைய வழிகளை அடிக்கடி விவரமாக சொல்லுவார்.

❖❖❖

இந்திய மண் மஹாவீரர், புத்தர் பெரிய தேசபக்தர்கள் போன்றவர்களை தோற்றுவித்த ஒரு பெரிய நாடு. இந்த நாட்டை ஆண்டவனின் சாம்ராஜ்யத்தோட்டம் என்று சொல்லலாம். இந்த நாட்டின் ஒவ்வொரு அங்குல மண்ணும் அதன் வீரமும் வளமும் மேற்சொன்னோரின் இரத்தம் சிந்திய வளமாகும். இது இப்படியிருக்க தற்பொழுது நம் நாட்டில் சிலரோ பலரோ புத்தியே இல்லாமல் பலபடபேசி பலவாறு வெறுப்பினைத் தூண்டுகிறார்கள். அந்த நோக்கத்தோடு எதையும் சொல்லக்கூடாது. தேசபக்தியோடு தான் எதையும் சொல்ல வேண்டும். தேசபக்தியை வெறுத்து பிரச்சார வெறுப்போடு இணைத்து 'மண்ணின் மைந்தர்' என்றெல்லாம் பேசுவது நம்மை நாமே வெறுக்கின்ற செயலாகும். பிறரை வெறுக்கச் செய்கின்ற செயல் பாபமே. மேற்சொன்ன சொல் இதற்கு பயன்படக்கூடாது.



❖❖❖

புத்தனைப் போன்று சிந்தித்தால் ஒரு கோணத்தில் மண்ணின் மைந்தர் என்கின்ற சொல்லும் கருத்தும் அபத்தமானதே. இத்தகைய எண்ணமுடைய மனிதன் இந்நாட்டின் பிரஜையாக இருக்க முடியாது. தனது செயல்களால் இத்தகைய மனிதன் தன்னைத்தானே சுருக்கிக் கொள்ளுகிறான்.

❖❖❖

கடவுள், ஞானிகள், முனிவர்கள், தெளிவான சிந்தனை யாளர்கள் இவர்களே உலக சமுதாயத்தை மேலான சிந்தனைக்கு இட்டு சென்று அங்கிருந்து அவர்களை பரிணாம வளர்ச்சிக்கு அழைத்து செல்லுகிறார்கள்.

❖❖❖

வெறுப்பு, வெறுத்தல் அல்லது வெறுக்கும் தன்மை என்றா லென்ன? அடிப்படையிலேயே ஒருவரை விரும்பாது இருத்தல் என்பதே இது.

❖❖❖

மாபெரும் கோபத்திற்கு முன்னோடியாய் வருகின்ற உணர்வே வெறுப்பு அல்லது வெறுத்தல் என்பதாகும்.

❖❖❖

ஒரு ஆணோ அல்லது ஒரு பெண்ணோ மேற்சொன்ன குணத்தை கொண்டிருந்தால் அவர்கள் முதலில் செய்ய வேண்டிய நல்ல செயல் எது தெரியுமா? அவர்கள் முதலில் தங்களது கோபத்தை அடக்க வேண்டும். பிறகு வெறுப்பு வெறுத்தல் என்ற இத்தன்மைக்கு முடிவான விடை கொடுத்துவிடலாம்.

❖❖❖

ஒரு மனிதன் மற்றொரு மனிதனை தாக்க வேண்டும் என்று எண்ணினால் அவனை தூண்டும் தன்மை எது தெரியுமா? மேற்சொன்ன வெறுப்பு என்ற தன்மையே.

❖❖❖

உலக வரலாறு இத்தன்மையை இப்படித்தான் கூறுகிறது. உலகில் எந்த நாடும் ஒரு நாடும் மற்றொரு நாட்டை வெறுக்கும் தன்மையை தூண்டும்படியாக மறைமுகமாவோ, நேர்முகமாகவோ பிரச்சாரம் செய்யக்கூடாது. இதற்காக நவீன சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி இவைகளை உபயோகப்படுத்துதல் ஆகாது. இவைகளின் மூலமாக மறைமுக அரசாங்கம் நடத்துவதும் கெடுதலாகும். இத்தகு இமாலயத்தவறைச் செய்யாதீர்கள்.

❖❖❖

மனிதனிடத்தில் தோன்றுகின்ற சிறிய உணர்ச்சியே வெறுப்பு. இத்தன்மை சில சமயங்களில் தவறான முறைகளை கையாளுவதாலும் பிரச்சாரம் செய்வதாலும் அப்பிரச்சாரத்தை கேட்பதாலும் வெறுப்பு பூதாகாரமாகிறது. நாம் இவைகளனைத்தையும் கண்டனம் செய்ய வேண்டும்.

❖❖❖

ஒரு உதாரணத்தை கவனியுங்கள். சிலர் சிலரின் மீது அன்பை பொழிவதற்கு பதிலாக வெறுப்பை பொழிகிறார்கள். இது எப்படிப்பட்டது தெரியுமா? ஒரு சிலர் சில மிருகங்களை வெறுப்பதற்கு ஒப்பாகும். பூனை, பல்லி இவைகளை சிலர் வெறுப்பதில்லையா? வேறு சிலர் சில மிருகங்களை வெறுப்பார்கள். சில மிருகங்களை அன்புடன் வளர்ப்பார்கள். இக்காரணம் பற்றியே வெறுப்பு என்ற உணர்வை சில மனிதர்களின் தன்மையாகி விட்டது என்று சொல்லுகிறார்கள்.

❖❖❖ ஞானச்சேரி ஞானிகள்

**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**

அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203
•••
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

# அக்னி நட்சத்திரம்



யமுனை ஆற்றங்கரைக்கு அருகில் உள்ள காட்டின் பெயர் காண்டவவனம். இந்திரனின் பாதுகாப்பில் உள்ள அவ்வனத்தில் உள்ள அரிய மூலிகைகள் செழித்து வளர அவ்வப்போது மழை பெய்ய செய்தான் இந்திரன்.

யமுனை நதியில் கண்ணன் மற்றும் அர்ஜுனன் தங்களுடைய தோழர்களுடன்நீராடி மகிழ்ந்தனர். பின் அவர்கள் கரையேறும் போது அங்கு வந்த அந்தணர் ஒருவர் கண்ணனையும் அர்ஜுனனையும் பார்த்து உங்களை பார்த்தால் கருணை மிக்கவர்களாக தெரிகிறீர்கள். என் பசிக்கு உங்களால் தான் உதவ முடியும். இவ்வனத்தில் என் பசிப்பிணியை தீர்க்கும் மருந்து உள்ளது. நான் இவ்வனத்திற்குள் பிரவேசிக்க நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்று வேண்டினார்.

அந்தணரை உற்றுப் பார்த்த கண்ணன் அக்னி தேவனே ஏன் இந்த வேடம் நேரிடையாகவே உன் பசிப்பிணிக்கு உணவு கேட்கலாமே என்று சொன்னதும் தன் வேடத்தை கலைத்த அக்னி தேவன் உலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் படியளக்கும் பரமாத்மாவே தங்களுக்கு தெரியாதது ஒன்றுமில்லை சுவேதசி என்ற மன்னனுக்காக நூறாண்டுகள் தொடர்ந்து யாகம் நடத்தினார் துர்வாச முனிவர்.

யாகத்தின் விளைவால் அதிகப்படியான நெய்யை உட்கொள்ளும் நிலைக்கு ஆளானேன். அதனால் மந்த நோய் என்னை தாக்கி விட்டது. அந்நோய்க்கான மூலிகைகள் இவ்வனத்தில் உள்ளன. அவற்றை நான் கபளீகரம் செய்தால் மட்டுமே என் பிணி தீரும் என்றார்.

நான் இவ்வனத்திற்குள் பிரவேசிக்க முயற்சிக்கும் போதெல்லாம் மழை பெய்ய மேகங்களுக்கு உத்தரவிட்டு என் தீ நாக்குகளை அணைத்து என் முயற்சியை தடுத்து விடுகிறான் இந்திரன் என்றார். ஆகவே நான் எரிக்கும் போது மழையை தடுத்து உதவி செய்யுங்கள் என்று கேட்டார்


அழகுராஜா

இதைக்கேட்ட அர்ஜுனன் அக்னி தேவனே நாங்கள் உனக்கு உதவுகிறோம். ஆனால் இங்கு நாங்கள் நீராட வந்ததால் எங்களிடம் ஆயுதங்கள் இல்லை. அதனால் இந்திரன் மழை பெய்வித்தால் தடுப்பதற்கு அம்பறாத் துணியும் அம்புகளும் வில்லும் தேவை என்றான்.

உடனே அர்ஜுனனுக்காக சக்தி மிக்க காண்டீப வில் அம்புகள் மற்றும் அம்பறாத் துணி என எல்லாவற்றையும் தந்தார் அக்னி பகவான்.

அப்போது கிருஷ்ணர் அக்னி தேவனிடம் உன் பசி பிணியை தீர்த்து கொள்வதற்காக 21 நாட்கள் மட்டும் இக்காட்டிற்குள் பிரவேசிக்கலாம். அச்சமயத்தில் இந்திரன் மழை பொழியாமல் பார்த்துக் கொள்கிறோம் என்றார் கிருஷ்ணர். அக்னி தேவன் வனத்திற்குள் பிரவேசித்து வனத்தை எரிக்கத் துவங்கினான்.

இதைக் கண்ட இந்திரன் மழை பெய்விக்க காளமேகத்திற்கு உத்திரவிட்டான். வானில் மேகங்கள் கூட்டம் கூட்டமாக வருவதை கண்ட அர்ஜுனன் அவ்வனத்தில் மழை பொழியாமலிருக்க தன்னிடம் உள்ள அம்புகளால் சரக்கூடு ஒன்றை கட்டி தடுத்தான்.

அக்னியும் முதல் ஏழு நாட்கள் வனத்தில் உள்ள மூலிகை பகுதிக்குள் நுழைந்து கபளீகரம் செய்தார். அடுத்த வந்த ஏழு நாட்கள் சுற்றியிருக்கும் அரிய மரங்களை உணவாக கொண்டார். அடுத்த வந்த ஏழு நாட்கள் மிதமாக உண்டு இறுதியில் இருவரிடமும் விடைபெற்றார் அக்னி தேவன். காண்டவ வனத்தை எரித்த நாட்களே அக்னி நட்சத்திரம் என்று கூறுகிறது புராணம்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா
தொலைபேசி எண்: 9994162182

# பக்தி அனைவருக்கும் பொது விலங்குகளுக்கு மோட்சமளித்த

# காளஹஸ்த்தி நாதர்

வாயு ஸ்தலமான காளஹஸ்தி கோயில் சோழர்களின் புகழ்பெற்ற மன்னர்களுள் ஒருவரும் தஞ்சை பெரிய கோவிலை கட்டிய இராஜராஜ சோழனின் மகனும், தென்னிந்தியாவின் புகழ் பெற்ற மன்னர்களுள் ஒருவருமான இராசேந்திர சோழன் கட்டிய கோவிலாகும்.

மிகப் பழமை வாய்ந்த தென்னாட்டுக் கோயில்களுள் இதுவும் ஒன்று. சங்கத்தமிழ் இலக்கியங்களில் இக்கோயில் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

பல்லவர்கால நாயன்மார்களின் தேவாரப் பதிகங்களிலும் இக்கோயில் பற்றிய தகவல்கள் உள்ளன. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்களும் இக்கோயிலில் உள்ளன. சோழர்களும், விஜய நகரத்து மன்னர்களும் பல கொடைகளை இக்கோயிலுக்கு அளித்துள்ளனர்.


பல்லவர் காலத்தில் இருந்த இக் கோயிலை 10 ஆம் நூற்றாண்டளவில் சோழர்கள் திருத்தி அமைத்தனர். முதலாம் குலோத்துங்க சோழன், தெற்குவாயிலில் அமைந்துள்ள கலிகோபுரத்தை அமைப்பித்தான். மூன்றாம் குலோத்துங்க சோழனும் சில சிறு கோயில்களை இங்கு எடுப்பித்துள்ளான்.

12 ஆம் நூற்றாண்டில் மன்னன் வீரநரசிம்ம யாதவராயன் தற்போதுள்ள சுற்று வீதிகளை அமைப்பித்ததுடன், நாற்புறமும் நான்கு கோபுரங்களையும் கட்டுவித்தார்.

கிபி 1516 ஆம் ஆண்டைச் சேர்ந்த விஜய நகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயனின் கல்வெட்டு ஒன்றின்படி, அவர் நூறுகால் மண்டபமொன்றையும் மேற்குப் புறக் கோபுரத்தையும் கட்டுவித்ததாகத் தெரிகிறது.

ஸ்ரீ காளஹஸ்தி என்கிற பெயரை கேட்டவுடன் நமக்கு நினைவிற்கு வருவது ராகுகேது பரிகார பூஜை செய்யும் ஸ்தலமாகும் என்பது தான்.

திருமணத்தடை நீங்க தினந்தோறும்


www.aanmeegamalar.com




பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு ராகு கேது பரிகார பூஜை செய்து வருகின்றனர்.

சைவத் ஸ்தலமான ஸ்ரீ காலஹஸ்தியில் சிவபெருமான் காளத்திநாதர் என்கிற பெயரோடு, ஞானப்பிரசன்னாம்பிகை தாயாரோடு அருள் பாலிக்கின்றார்.

இதன் வரலாற்றை கேட்கையில் இப்படியும் ஒரு பக்தி இருக்க முடியுமா? என்கிற அளவிற்கு நம்மை வியப்பில் ஆழ்த்தி விடுகிறது.

வனமாக இருந்த இந்த இடத்தில் வாயு லிங்கமாக தோன்றிய சிவபெருமானை வழிபட சிலந்தி ஒன்று தினமும் வருமாம்.

மழையில் நனைந்த சிவபெருமானைக் கண்ட அந்த சிலந்தி தன்னுடைய உமிழ் நீரில் இருந்து உருவாகும் சிலந்தி வலையை பின்னி வைத்ததாம்.

பெரும் இடி ஒன்று இடித்ததில் அந்த வலை எரிந்து சாம்பலானது. சிலந்தியால் அதை தாங்கிக் கொள்ள முடியாமல் இறந்து போனதாம்.

இதனால் அந்த சிலந்தியின் பக்தியை மெச்சிய சிவபெருமான் அதற்கு முக்தி கொடுத்தாராம்.

தினமும் நாகம் ஒன்று அந்த லிங்கத்தை ஆரத்தழுவி மாணிக்கங்களை கக்கி அர்ச்சனையாக செய்து வழிபடும்.

அதற்கு பின்னால் வரும் யானை ஒன்று தன் தும்பிக்கையால் நீரை வாரி இறைத்து அபிஷேகம் செய்யும்.

பின் மலர்களை பறித்து வந்து அர்ச்சனையும் செய்து வரும். இதனால் அந்த மாணிக்கங்கள்


அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள்,

மாத இதழ்கள்,

பப்ளிகேஷன்ஸ்

புக் ஓர்க்,

அட்டைப்பட

வடிவமைப்பு,

நாளிதழ்கள்,

போன்றவை

தரமாகவும்

குறைந்த செலவில்

செய்துதரப்படும்

SML Graphics

Sree Maha Laksmi Graphics

செல்: +91-9444228203




கீழே விழுந்து சிதறி விடுவது உண்டு.

தொடர்ந்து இது போல் நடந்து கொண்டிருக்க அந்த நாகத்திற்கு சந்தேகம் வந்தது. யானை இது போல் செய்வதை அந்த நாகம் ஒரு நாள் பார்த்து விட்டது. உடனே கோபமுற்ற நாகம் யானையின் தும்பிக்கையினுள் சென்றுவிட்டு மூச்சடைக்க செய்தது.

சுவாசிக்க முடியாமல் அந்த யானை பாறையில் மோதி மோதி கடைசியில் இரண்டும்இறந்து போனது. இவைகளின் பக்தியை மெச்சிய சிவ பெருமான் இவர்களுக்கும் முக்தியை கொடுத்தார் என்று ஸ்தலபுராணம் எடுத்துரைக்கிறது.

இந்த தலத்தில் வீற்றிருக்கும் காளத்திநாதர் உருவத்தில் கீழே இரண்டு தந்தங்களும், இடையில் பாம்பும், பின்புறம் சிலந்தியும் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ என்பது சிலந்தியையும், காளம் என்பது நாகத்தையும், அத்தி என்பது யானையையும் குறிப்பதால் ஸ்ரீ காளஹஸ்தி என பெயர் பெற்று விளங்குகிறது.

கோவிலைப்பற்றி பல குறிப்புகள் தேவாரப் பாடல்களும், புராணங்களும் தெளிவாக கூறுகிறது.

இங்கு வரும் பக்தர்களுக்கு எத்தனை குறைகள் இருந்தாலும் உடனே நீங்குவதாக நம்பிக்கையுள்ளது. திருப்பதி செல்பவர்கள் பெரும்பாலும் காளத்தி நாதரை வழிபடாமல் வீடு திரும்புவதில்லை.

## ஸ்தல சிறப்புகள்

துளி அளவிலும் காற்று புகாத கர்ப்பக் கிரகத்தில் வீற்றிருக்கும் இந்த லிங்கத்திற்கு ஏற்றப்படும் தீபம் ஆனது படிப்படியாக மேலெழும்பி அழகாக நிற்காமல் அசைந்து ஆடிக் கொண்டே இருக்கும். காற்றே இல்லாத இடத்தில் தீபம் மட்டும் அசைந்து ஆடுவது வியப்பிற்குரியது என்பது விஞ்ஞானிகள் கூற்று.

அகத்தியர் இத்தலத்தில் வந்து சிவபெருமானை வழிபட்டு இங்கிருக்கும் விநாயகரை வணங்காமல் சென்றது விநாயகரை கோபம் மூட்டியது. இதனால் விநாயகர் அருகில் இருக்கின்ற பொன்முகலி ஆற்றை முழுவதுமாக வற்றி போகுமாறு செய்து விட்டார். இதனால் மனம் வருந்திய அகத்தியர் விநாயகரை பிரதிஷ்டை செய்து வணங்கியதாக தலபுராணம் கூறுகிறது.




பிற்காலத்தில் விநாயகர் பிரதிஷ்டை செய்த இடம் ஆழத்தில் சென்றதால் இந்த விநாயகர் பாதாள விநாயகர் என்று அழைக்கப்படுகிறது. இன்றும் இந்த விநாயகரைத் தரிசிக்க பக்தர்கள் 20 அடி ஆழத்திற்கு செல்ல வேண்டியதாக உள்ளது.

# கருப்பு எள்ளின்
# அற்புத மருத்துவ பயன்கள்

எள்ளுமிட்டாய், எள்ளுருண்ட, எள்ளுபொடி இப்படி பலவிதத்துல சின்ன வயசுலயே எள்ளை அதிகம் விரும்பி சாப்பிட்டிருப்போம். பொதுவாகவே இந்த இனிப்பு வகைகள் நமக்கு ரொம்ப பரிட்சையமான உணவுகளாக இருந்தாலும், விதிவிலக்காக எள்ளு கலந்த உணவுகள் சுவைக்கு மட்டுமின்றி அதிதஇயற்கை மருந்துகளாக நமது உடலுக்குபல்வேறு நன்மைகள் செய்திருக்கிறது என்பதை பார்க்கும்போது நமது முன்னோர்களின்தொலை நோக்கு மருத்துவத்தின் பயன் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

எள்ளுக்குள்ள எவ்வளவு அற்புதங்கள்இருக்குனு தெரிந்தால் நீங்க இனி இத விட்டு வைக்க மாட்டீங்க..!

அந்தக் காலத்தில் புற்றுநோய், சுகர், பி.பி., கொழுப்பு போன்றவை அதிகம் அறியப் படாத நோயாக இருந்ததற்கு காரணம் நமது முன்னோர் களின் உணவுப் பழக்க வழக்கங்களே.

முக்கியமாக, எள்ளு சாப்பிடறதால புற்றநோய் வராது என்பது தற்போதைய அறிவியல் விஞ்ஞானத்தில் நிருபிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அது மட்டுமில்லாம, புற்றுநோய் வந்த வருக்கும் இது அருமருந்தாக இருக்கும்னு இப்போதைய ஆராய்ச்சியில் கண்டுபிடிச்சிருக்காங்க!

எள்ளு சாப்பிடுவதால் பலவித பயன்கள் நமக்கு கிடைக்கும் என்பதாலே எந்த ஒரு பலகாரம் என்றாலும், அதில் கொஞ்சம் எள்ளை நம் முன்னோர்கள் சேர்த்து சமைக்கும் பழக்கத்தை கொண்டிருந்தனர். உதாரணத்துக்கு முறுக்கு, சீடை, ஓட்டவடை, எள்ளுருண்டை... இப்படி வித விதமான பண்டங்களில் எள்ளை சேர்க்கும் பழக்கம் அன்று முதல் இன்று வரை கடைபிடித்து வருகின்றோம்.

இப்படி பலவித உணவு பொருட்களில் எள்ளின் பங்கு இன்றியமையாத ஒன்றாக இருந்து வருகின்றது. எள்ளை உணவில் சேர்த்து கொள்வதால் ஏராளமான நன்மைகள் கிடைக்கும். அதில் மிக



www.aanmeegamalar.com

முக்கியமானது புற்றுநோயை எதிர்த்து நிற்பதே.

எள்ளில் உள்ள எண்ணற்ற ஆன்டி ஆக்சி டன்ட்ஸ், ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள், கால் சியம், பாஸ்பரஸ், மெக்னீசியம், பொட்டாசியம், வைட்டமின் எ போன்றவை தான் எள்ளின் அத்தனை மகத்துவத்திற்கும் காரணம். அத் துடன் இதை சரியான அளவில் எடுத்து கொண் டால் பலன் முழுமையாக கிடைக்குமாம்.

தாய்லாந்தின் Chiang Mai University, புற்றுநோய் மற்றும் எள் பற்றிய ஆராய்ச்சியில் பல திடுக் கிடும் தகவல்கள் வெளியிட்டது. அதில் கருப்பு எள் புற்றநோய் செல்களை உருவாக விடாமல் தடுக்கும் எனவும், மூளை செல்களை மறு உற்பத்தி செய்யும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. புற்றநோய் வரவிடாமல் நம்மை காப்பதற்கு மிக முக்கிய காரணம் என்று தனது ஆராய்ச்சியில் தெரியப்படுத்தியுள்ளது.

Sesamin என்பது எள்ளில் உள்ள முக்கிய மூல பொருள். மற்ற தாதுக்களை காட்டிலும் இந்த Sesamin வேதி மூல பொருள் எதிர்ப்பு சக்தியை தூண்டி நேரடியாக புற்றுநோய் செல் களை தடை செய்கிறது. இவை ஆண்கள் பெண்கள் என இரு விதமாக அதன் பயனை பிரித்து தருகின்றது.

பெண்கள் தினமும் எள் சாப்பிடுவதால் அவர் களுக்கு பெரிதாக வருகின்ற மார்பக புற்றுநோய் தடுக்கப்படுகிறது. அத்துடன் ரத்த நாளங்களில் புற்றுநோய் செல்கள் வளர விடாமல் பார்த்து கொள்கிறது என தாய்லாந்து ஆராய்ச்சியில் கூறப்படுகிறது.

மார்பக புற்றுநோயிற்கு மட்டுமின்றி பெருங் குடல் புற்றுநோய், கல்லீரல் புற்றுநோய் போன்ற வற்றையும் இது தடுக்கிறது.

குடலில் சேர்ந்துள்ள கெட்ட கொலஸ்ட்ராலை வெளியேற்றி சுத்தமாக வைக்கிறது.

எந்த எள் அதிக ஆற்றல்களை கொண்டது என்கிற கேள்விக்கு பதில், கருப்பு எள் தான்.

எள் பற்றிய பல ஆய்வுகளில் கருப்பு எள் தான் மகத்துவம் பெற்றது என கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. வெள்ளை எள்ளை விட கருப்பு எள்ளில் தான் ஊட்டச்சத்துக்களும், தாதுக்களும் அதிகம் இருக்கிறதாம்.

நீங்கள் எள் சாப்பிடுவதால் இந்த பயனும் உங்களுக்கு கூடுதலாக கிடைக்கிறது. இதில் இரும்பு சத்து, வைட்டமின் A & Bஆகியவை நிறைந்துள்ளதால் இளம் நரையை தடுக்கும். மேலும் முடி உதிர்தல், ஞாபக மறதி போன்ற பிரச்சினைகளுக்கும் முற்றுப்புள்ளி கிடைக்கும்.

எள் சாப்பிடுவதால் உடலில் சேர்ந்துள்ள கழிவுகள் எளிதாக வெளியேறி விடுமாம். குறிப் பாக கல்லீரலில் உள்ள நச்சுக்களை சுத்தம் செய்து ஆரோக்கியமாக இருக்க வைக்கும். முக்கியமாக செரிமான கோளாறு உள்ளவர்களுக்கு இதை நன்கு உதவும்.

தினமும் அரை ஸ்பூன் எள்ளு சாப்பிடுவது சிறந்தது. இதை உணவுடன் சேர்த்து சாப்பிட்டால் நல்லது குறிப்பாக அரிசி அல்லது ஓட்ஸ்சுடன் சேர்த்து சாப்பிட்டால் பலன் முழுமையாக கிடைக்கும்.

ஆன்மிகமலர்
ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...
ஆன்மிக சேவை
செய்யும் நமது
சேனலை
Subscribe
like & share

இதுவரை
வெளிவந்த
அனைத்து
இதழ்களையும்
எந்தவித
கட்டணமின்றி
முற்றிலும்
இலவசமாக
படிக்க
aanmeegamalar.com
இணையதளத்தை
பார்க்கவும்





















# கல்லில் வளரும் வாழை




அருள்மிகு தேன் மொழியம்மை உடனுறை தேவபுரீஸ்வரர் திருக்கோயில் – திருத்தேவூர்

அமைவிடம்:

திருவாரூரில் இருந்து நாகப்பட்டிணம் செல்லும் சாலை வழியில் கீவளூரை அடைந்து, அங்கிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் சாலையில் சென்றால் தேவூரை அடையலாம். திருவாரூர் வலிவலம் நகரப்பேருந்து தேவூர் வழியாகச் செல்கிறது. தேவூரில் அக்ரஹாரம் நிறுத்தம் என்று கேட்டு இறங்கினால் கோயிலுக்கு எதிரிலேயே இறங்கலாம்.

கோசெங்கட் சோழன் கட்டிய மாடக் கோவில்களில் இத்தலத்து ஆலயமும் ஒன்றாகும்.

இத்தலத்து ஸ்தலவிருட்சம் கல்லிலேயே வளரும் அதிசய வாழைமரம் ஆகும். இது வெள்வாழை என்ற வகையைச் சார்ந்தது.

பிற்காலப் பாண்டியர், விஜயநகரத்தார் கல்வெட்டுகள் உள்ளன.

தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 148 வது தேவாரத்தலம் ஆகும்.

சிறந்த குரு ஸ்தலமான இங்கு வழிபாடு செய்வதால் குரு சம்மந்தப்பட்ட தோஷங்கள் விலகும் என்பது ஐதீகம். செல்வம் பெருகவும், இழந்த செல்வங்கள் மீண்டும் பெறவும், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கவும் தேவபுரீஸ்வரரை வழிபாடு செய்வது சிறப்பு.

இறைவர் திருப்பெயர்: தேவபுரீஸ்வரர், தேவ குருநாதர்

இறைவியார் திருப்பெயர் : தேன் மொழியம்மை, மதுரபாஷிணி

தல மரம்: வெள்வாழை

தீர்த்தம்: தேவதீர்த்தம்

வழிபட்டோர்: குருபகவான், இந்திரன், குபேரன், சூரியன், கௌதம முனிவர்.

தேவாரப் பாடல்கள்: சம்பந்தர் 1. பண்ணிலாவிய மொழியுமை, 2. காடுபயில் வீடுமுடை.

தேவாரப் பாடல்கள்: சம்பந்தர்

பண்ணி லாவிய மொழியுமை<br>
பங்கனெம் பெருமான்<br>
விண்ணில் வானவர் கோன்விம<br>
லன்விடை யூர்தி<br>
தெண்ணி லாமதி தவழ்தரு<br>
மாளிகைத் தேவூர்<br>
அண்ணல் சேவடி யடைந்தனம்<br>
அல்லலொன் றிலமே

தலவரலாறு:

தேவர்கள், வழிபட்டதால், இப்பெயர். குபேரன் வழிபட்டு, சங்கநிதி, பதுமநிதி பெற்ற தலம். இத்தலத்து இறைவனை தேவர்கள் வழிபட்டு அருள் பெற்றதால் தேவபுரீசுவரர் என்றும்,குரு பகவான் வழிபட்டு அருள் பெற்றதால் தேவ





குருநாதர் என்றும் இங்குள்ள இறைவன் வணங்கப்படுகிறார். கோசெங்கட் சோழன் கட்டிய மாடக் கோவில்களில் இத்தலத்து ஆலயமும் ஒன்றாகும். மூன்று நிலைகளை உடைய கிழக்கு நோக்கிய ராஜகோபுரத்தின் வழியாக உள்ளே நுழைந்தவுடன் தென்புறம் தேவதீர்த்தம் இருக்கிறது. நேரே கொடிமரம், பலிபீடம் மற்றும் நந்தியைக் காணலாம். கீழே உள்சுற்றில் அறுபத்துமூவர், வலம்புரி விநாயகர், சுப்பிரமணியர், அகல்யை வழிபட்ட லிங்கம், மகாலட்சுமி முதலிய சந்நிதிகள் உள்ளன. நடராசசபை தனியே அழகாக உள்ளது.

கட்டுமலையின் அடிவாரத்தில் இந்திரன், முருகன், விநாயகர் சந்நிதிகள் அருகருகே உள்ளன. கட்டுமலை ஏறி மேலே சென்றால் கௌதமர் வழிபட்ட லிங்கம், சோமாஸ்கந்தர், நவக்கிரகம் ஆகியவற்றைக் காணலாம். மூலவர் தேவபுரீசுவரர், இறைவி மதுரபாஷினி ஆகிய இருவரும் கிழக்கு நோக்கி அருள் பாலிக்கின்றனர். தலவிநாயகர் வலம்புரி விநாயகர் என்று அழைக்கப்படுகிறார். கருவறையின் பின்புறச் சுவற்றில் எப்போதும் காணப்படும் லிங்கோத்பவருக்கு பதிலாக மகாவிஷ்னு காட்சி கொடுக்கிறார்.

ஸ்தலவிருட்சம்:

இத்தலத்து ஸ்தலவிருட்சம் கல்லிலேயே வளரும் அதிசய வாழைமரம் ஆகும். இது வெள் வாழை என்ற வகையைச் சார்ந்தது. தேவர்கள் இத்தலத்து இறைவனை வழிபட்டபோது தேவ லோகத்தில் உள்ள வெள்வாழையும் இறைவனை இங்கு வழிபட்டு ஸ்தல விருட்சமாக மூலவர் அருகி லேயே அமைந்துவிட்டது.



சிவத்திரு.குமரேசன்

இந்த வாழைமரத்திற்கு இன்றும் நீர் ஊற்றுவதில்லை. கருங்கல்லால் ஆன கட்டுமலையில் வளர்வது இந்த ஸ்தல விருட்சத்தின் தெய்வீகத் தன்மையைக் காட்டுகிறது.

கல்லில் வளர்வதால் இவ் வாழைமரம் கல்வாழை என்று அழைக்கப்படுகிறது. ராவணன் குபேரனுடன் போரிட்டு குபேரனுடைய சங்கநிதி, பதுமநிதி என்ற அமிர்த கலசங்களை எடுத்துச் சென்றான். குபேர ஸ்தானத்தை இழந்த குபேரன் தேவூர் தலத்து இறைவனை செந்தாமரைப் புஷ்பங்களால் அர்ச்சித்து வழிபட்டதால் குபேர கலசங்களைத் திரும்பப் பெற்று மீண்டும் குபேர பட்டத்தைப் பெற்றான்.

குபேரனுக்கு பட்டம் வழங்கபட்ட ஸ்தலம் இது. செல்வம் வளரவும், இழந்த செல்வத்தை மீண்டும் பெறவும் இத்தலத்து இறைவனை வழிபட்டால் குபேரனுக்குச் சமமான செல்வத்தைப் பெறலாம். இந்திரன் விருத்தாசுரனைக் கொன்ற பாவத்திற்கு இந்திர பட்டத்தை இழந்தபோது, இத்தலத்து இறைவனை வணங்கி சாபம் நீங்கப் பெற்று மீண்டும் இந்திர பட்டத்தைப் பெற்றான்.

ஆகையால் பதவி வேண்டுவோர், இழந்த பதவியை மீண்டும் பெற விழைவோர், வேலை வேண்டும் என தவிப்போர் இத்தலத்து இறைவன் தேவபுரீசுவரரை வழிபட வேண்டும். இத்தலத்து இறைவனை சூரியன் வழிபட்டிருப்பதால், சூரியனால் இடர்வரும் என்று எண்ணுபவர்கள் தேவபுரீசுவரரை வழிபட்டால் சூரியன் அருள் கிடைக்கும்.

கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமை சூரிய ஒளி இறைவன் மேல் படுவதை தரிசிக்க பக்தர்கள் பெருமளவில் இங்கு வருகிறார்கள். திருமணமாகாதவர்கள், புத்திர பாக்கியம் இல்லாதவர்கள் தேவூர் தலத்து இறைவனை திங்கட்கிழமைகளில் வழிபாட்டால் பலன் பெறலாம்.

– சிவத்திரு.குமரேசன்
இராஜசிம்மன்
உதவிப் பேராசிரியர் SRM கலை
மற்றும் அறிவியல் கல்லூரி
919003296221 easanaithedi.in






பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள
கீதாசமையல்
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# ஆன்மீக வழியில் அமைதி

நாம் இன்பத்திலும் துன்பத்திலும் மனதை ஒரு நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று படிப்பது எளிது. அதனை மற்றவர்களுக்கு உபதேசிப்பது எளிது. மற்றவர்கள் கூற நாம் கேட்பது எளிதுதான். நமது மனதைக் கலங்காமல் ஒரு நிலையில் வைத்துக் கொள்வதற்கு ஆன்மிகம் பெரிதும் துணை புரிகிறது. நமது மனம் துன்பத்திலும் இன்பத்திலும் ஒரு நிலைக்கு சமநிலைக்கு மனபக்குவப்பட்டு விட்டால் அதன் மூலம் நாம் தேடும் விரும்பும் அமைதியைப் பெறுவதற்கு முடியும்

மனித வாழ்வில் ஒவ்வொரு நிகழ்விலும் இன்பமும் துன்பமும் கலந்து வருவதுண்டு. மனிதன் தனக்கு வந்த இன்பத்தைக் கண்டவுடன் தலைகால் புரியாமல் ஆடக்கூடாது. அதேபோல் துன்பம் வந்தவுடன் மனம் கலங்கி விடுவதும் கூடாது. நாம் அடையும் இன்பத்திலும் துன்பத்திலும் மனம் ஒரு நிலையில் வைத்துக் கொள்வதே மன பக்குவ நிலையை நோக்கி நாம் செல்கிறோம் என்பதை உணர முடியும். இந்த மனபக்குவ நிலை அடைவதற்கு ஆன்மிகம் துணை புரிகிறது. மனபக்குவ நிலைக்கு ஆன்மீக வழியில் பயிற்சி பெற வேண்டும். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்று ஆன்மீக வழியில் சிந்தித்தால் நமது மனம் பக்குவ நிலை அடைந்து விடும். அவ்வாறு நமது மனம் பக்குவ நிலையை அடையும்போது நம்மை அறியாமல் மனம் அமைதியில் ஆழ்ந்து விடும்.

பொதுவாக மனிதர்கள் அனைவரும் அமைதியை விரும்புவார்கள். உலக ஆசையை மனதிலிருந்து விட்டு விடுவதற்கு விரும்புவதில்லை. ஆசையே துன்பத்துக்கு முதல் காரணம் என்று புத்தர் போதித்துள்ளார். உலகில் நமது மனமும் உடலும் எவ்விதமெல்லாம் துன்பங்களுக்கு ஆளாகிறோம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். மற்றவர்களால் நமக்கு வரக்கூடிய துன்பங்கள், நமது செயல்பாடுகளால் வரக்கூடிய துன்பங்கள் என்பதை பிரித்து அறிந்து நாம் செயல்பட வேண்டும். நமக்கு எந்த விதத்தில் துன்பங்கள் வரப்பெற்றாலும் அதனை நாம் தாங்கும் மனநிலைக்கு வருவதற்கு ஆன்மிகம் பெரிதும் துணை புரிகிறது.

40

யார் நம்மைத் துன்பப்படுத்தினாலும் அஞ்சாமல் மனம் கலங்காமல் இருந்து கொள்வதற்கு மனதை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். இன்னா செய்தார்க்கும் இனியவை செய்து மனதை பக்குவ நிலைக்கு கொண்டு வரவேண்டும். பொறுமையுடன் அறிவுபூர்வமாக சிந்தித்து மற்றவர்கள் செய்யும் தவறுகளை பெருந்தன்மையுடன் மன்னித்து விடுவது ஆண்மையாகும் என்று வடலூர் வள்ளலார் கூறியுள்ளார். இதனை நமது வாழ்வில் கடைபிடித்தால் மற்றவர்களால் வரக்கூடிய துன்பங்களில் இருந்து மனதளவில் விடுதலை கிடைக்கும்.



நமது வாழ்க்கை முறையை நன்கு ஆராய்ந்து மிகத் தவறானது என்பதை அறிந்து உணர்ந்து அதனை மாற்றி அமைப்பதற்கு தீவிரமாக முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றி காண வேண்டும். இதனை நாம் வாழ்வில் ஆராய்ந்து கடைபிடித்தால் நமக்கு நாமே வரவழைத்துக் கொண்ட துன்பங்களில் இருந்து எளிதில் விடுபடுவதற்கு முடியும். பிறர் நமக்குச் செய்த தீமைகளை பெருந்தன்மையுடன் மன்னிக்கும் மனநிலைக்கு வர வேண்டும்.

இதனை திருவள்ளுவர்

“இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல் “ (குறள் 314)

என்ற திருக்குறள் மூலம் நமக்கு வழி காட்டியுள்ளார். மற்றவர்களை குறை சொல்லாமல், நம் வாழ்வில் நாம் நடக்கும் வழியில் தவறு குற்றம் எதுவும் நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும், அவ்வாறு செயல்படும்போது மனதளவில் உறுதியாக அமைதி கிடைக்கும். மற்றவர்களிடம் குறை காணாமல் இருப்பதற்கு ஆன்மிகம் நமக்கு வழி காட்டுகிறது.

பிறர் நமக்குச் செய்த தீமைகளை நாம் பொறுமையாக சம்பந்தப்பட்டவரிடம் சுட்டிக்காட்டி அவர் திருந்தும்படி முயற்சி செய்யலாம். அவர் நமக்குச் செய்த தவறை சுட்டிக்காட்டியும் அவர் உணர்ந்த பின்பும் திருந்தவில்லையானால், அதற்காக அவரை நாம் கடிந்து கொள்ளவோ, தண்டிக்கவோ வேண்டாம். அவரிடம் வீண் விவாதங்களில் ஈடுபடாமல் அப்படிப்பட்டவர்களிடம் இருந்து நாம் ஒதுங்கி விடுவது மிகவும் நல்லது. உலகில் உள்ள எல்லா உயிர்களிடத்தில் அன்புடன் இருப்பவர்கள் மனதில் அமைதி தானாக வந்து சேரும்.

ஞானிகள் நமது உடலை ஸ்தூல சரீரம், சூக்ம சரீரம் மற்றும் காரண சரீரம் என மூன்று பிரிவுகளாக பிரித்து வைத்துள்ளனர். ஸ்தூல சரீரம் என்பது நாம் கண்ணால் பார்த்துக் கொண்டு இருக்கும் சரீரம் ஆகும். நம் கண்ணுக்குத் தெரியாமல் நாம் உணர்ந்து கொள்ளகூடிய மனம்தான் சூக்ம சரீரம். இதனை நம் கண்களால் பார்க்க முடியாது. ஆனால் நம்மிடம் சூக்ம சரீரம் இருப்பதை உணர முடியும். எதனிடமிருந்து நமது உடல் தோன்றியதோ, நமது மனம் எதிலிருந்து


• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

தோன்றியதோ அதுவே காரண சரீரம் ஆகும். ஞானிகள் குறிப்பிட்ட இந்த மூன்றுவிதமான சரீரங்களினால்தான் மனிதன் இன்ப துன்பங்களை அனுபவவிக்கிறான் என்று கூறியுள்ளார்கள்.

மனிதனுக்கு மூன்று விதமான அவஸ்தைகள் உள்ளன. அவை விழிப்பு நிலை, கனவு நிலை, மற்றும் ஆழ்ந்த உறக்க நிலை ஆகும். விழிப்பு நிலை என்பது நாம் உலக விசயங்களில் ஈடுபட்டு இருக்கும்போது உள்ள நிலை ஆகும். நாம் விழிப்பு நிலையில் உள்ளது போல் எண்ணங்களின் அலைகள் மனதில் தோன்றி உண்மை நிகழ்வுகள் போன்று இரவில் தூங்கும்போது உணரக்கூடிய கனவு காணும் நிலையாகும். கனவு நிலையில் உடலும் நமது ஐம்புலன்களும் செயல்படாமல் அமைதியாக இருக்கும். எடுத்துக்காட்டாக நாம் கனவு காணும்போது நமது கண்கள் மூடிய நிலையில் இருக்கும். ஆனால் கனவில் வரக்கூடிய காட்சிகளை நம் கண்களால் பார்த்துக் கொண்டிருப்போம். இதேபோன்றுதான் கனவில் உலக விசயங்களில் நமது எண்ணங்கள் ஐம்புலன்கள் செயல்படுவதுபோல் சுழன்று கொண்டே இருக்கும்.

இரவில் தூங்கும்போது கனவுநிலையில் இந்த உலகில் நாம் காணாத அதிசயக் காட்சிகள்கூட வரும். எடுத்துக்காட்டாக நாம் பறப்பது போல், பாலைவனத்தில் ஓடுவதுபோல் இன்னும் மனம் மகிழ்ச்சி தரக்கூடிய இயற்கை காட்சிகள் தோன்றும். இவையெல்லாம் உண்மையில் நிகழ்வதுபோல் தோன்றும். ஆனால் உண்மையில் கனவில் தோன்றிய நிகழ்வுகள் ஏதும் அப்போது நிகழ்ந்து கொண்டிருப்பதில்லை. நம்மில் பலருக்கு பகலில் தூங்கும்போதுகூட கனவுகள் காண்பது உண்டு. பகல் கனவு பலிதம் ஆவதில்லை என்று கூறுவார்கள்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்




ஆழ்ந்த உறக்க நிலை என்பது நமது மனம், மனதில் உருவாகும் எண்ணங்கள், மற்றும் ஐம்புலன்கள் அனைத்தும் அடங்கி இருப்பது. அதாவது தூங்கும்போது அனைத்து உணர்வுகளும் ஐம்புலன்களும் அடங்கி அமைதி நிலையில் இருப்பது ஆழ்ந்த உறக்கநிலை எனப்படும். ஆழ்ந்த உறக்க நிலையை தற்காலிக இறப்பு என்றுகூட கூறலாம். ஆழ்ந்த உறக்கத்தில் உலக நினைவுகள் இல்லாத நிலையாகும். அது ஒரு ஆனந்த நிலை என்று கூறலாம். ஆழ்ந்த உறக்க நிலையில் நாம் விரும்பும் தேடும் அமைதி கிடைக்கும். ஆழ்ந்த உறக்க நிலை அனைவருக்கும் வரும் என்று கூற முடியாது. எடுத்துக்காட்டாக ஒருவன் உலகில் பொருள் சேர்ப்பதிலேயே அல்லும் பகலும் அவனது மனம் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். அவனுக்கு எப்படி ஆழ்ந்த உறக்க நிலை கிடைக்கும். தூக்கத்தில் இருக்கும்போதுகூட பொருளுக்காக அவன் மனம் அலைந்து கொண்டுதான் இருக்கும். ஆழ்ந்த உறக்கநிலை வருவதற்கு ஆன்மீக பயிற்சியில் மனம் ஈடுபட வேண்டும். நமது மனம் பக்குவ நிலைக்கு வர வேண்டும். நமக்கு மனம் பக்குவ நிலைக்கு வரும்போது ஆழ்ந்த உறக்க நிலையில் இருக்கலாம். ஆழ்ந்த உறக்க நிலையை ஆன்மா அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சத்சித்தியானந்தம் என்பதே ஆத்மா. சத் என்றால் நித்தியம், சித் என்றால் அறிவு, ஆனந்தம் என்பது நிறைவு ஆகும்.

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

சேவை நோக்கோடு வெளிவரும் நமது இதழுக்கு வாசகர்களின் ஆதரவு தேவை... அறியாத ஆன்மிகத் தகவல்கள் பலவற்றை மிகுந்த சிரமங்களுக்கிடையே தொகுத்து, அனைவருக்கும் புரியும்படி தெளிவாகவும், அழகிய வண்ணமயமாகவும் வெளியிட்டு வருகிறோம். நமது இதழுக்கு பொருளாதார ரீதியில் உதவி செய்ய விரும்பும் வாசகர்கள் கீழ்காணும் வழிமுறைகளில் உதவலாம். எங்கள் சேவைக்கு உங்கள் உதவி தேவை.

## விருப்ப சந்தா

சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
Paytm BHIM Baroda Pay BHIM BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**